# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice





தருமபுரி மாவட்டத்தின் நத்தம், அண்ணாநகர், கொண்டாம்பட்டி கிராமங்களில் உள்ள பட்டியல் வகுப்பின குடும்பங்களின் மீதான சமூக பொருளாதார இனப்படுகொலை

# தர்மபுரி மாவட்டம் நாய்க்கன் கொட்டாய் எனும் பகுதியில் உள்ள நத்தம் காலனி, அண்ணாநகர்,கொட்டம்பட்டி எனும் தலித் கிராமங்களின் மீது சமூக, பொருளாதார இனப்படுகொலை போன்ற சாதிவெறி தாக்குதல்

j®kòÇ kht£l« ,  ehŒ¡f‹ bfh£lhŒ vD« gFâÆš cŸs e¤j« fhyÅ, m©zhef®,bfh£l«g£o vD« jÈ¤ »uhk§fË‹ ÛJ flªj 7ªnjâa‹W rhâ bt¿a®fshš Rkh® khiy 4 kÂ Kjš ïuî 9 kÂtiu bjhl® jh¡Fjš elªJŸsJ . bghJthf jÈ¤ k¡fË‹ åLfis F¿it¤J« F¿¥ghf t‹Åa® bg©fis fhjš âUkz« brŒj jÈ¤ FL«g§fis F¿ gh®¤J« ïªj jh¡Fjš elªJŸsJ

e¤j« fhyÅia nr®ªj ïstur‹ ( taJ 23)vD« jÈ¤ ïisPD« mj‹ mUnf cŸs bršy§bfh£lhŒ »uhk¤â‹ t‹Åa bg© â›ah ( taJ 21) ïu©lh©Lfshf fhjÈ¤J tªjd®. ïUªjhY« fhjš Úo¤jJ.flªj m¡nlhg® 14 m‹W ïUtU« âUkz« brŒJŸsd®.ïu©Lthu§fS¡F ãwF nry« kht£l¡fhtšJiwÆl« ru© milªJ ghJfh¥ò nfhÇd®.jftš m¿ªj j®kòÇ fhtšJiwí« ghJfh¥gË¤JŸsJ.

et«g® 4 m‹W ghkf ïisP® mÂ¤jiyt® kâaHf‹ ehŒ¡f‹ bfh£lhÆš T£oa rhâ¥gŠrha¤âš ïªj fhjš âUkz¤ij g‰¿ Äf fLikahf gyU« ngáíŸsd®.

ehfuh{ â›ahÉ‹ jªij âObu‹W kuzkilªjîl‹ mtuJ cliy it¤J rhâ bt¿ia¤ Jh©l, â£lÄ£l, Ka‰áfŸ elªJŸsd.ïsturÅ‹ åL rhiy Xukhf cŸsJ.mj‹tÊahf¤jh‹ ehfuhÍ‹ ïWâ Ãfœ¢á nghahf nt©L« .mjid kdâš bfh©L 22 »uhk§fËš ïUªJ M£fŸ âu£l¥g£LŸsd®. ï¤jifa mÂâu£liy csî¤JiwnahŠ fhtšJiwnah cz®ªJ ghJfh¥ò V‰ghLfis brŒaÉšiy.

ïWâ C®ty¤âš tªjt®fËš xU gFâÆd® e¤j« fhyÅÆ‹ x›bthU å£ilí« bfhŸisao¤J ,vÇ¤J behW¡»d®.  ï‹bdhU gFâÆd® ehfuhÍ‹ cliy bfh©L âU¥g¤Jh® ãujhd rhiy¡F br‹W »l¤âd® .rhiy k¿aš brŒjd®.ku§fis bt£o rhiy ngh¡Ftu¤ij jil brŒjd®.

ï‹bdhU gFâÆd® yhÇ ,fh®fŸ ,ig¡FfnshL e¤j« fhyÅÆš ïUªJ ïu©L »nyhÛ£l® Jhu¤âš cŸs m©zhef®,k‰W« lªJ »nyhÛ£l® Jhu¤âš cŸs bfh£l«g£o Æš cŸs jÈ¤ »uhk§fŸ ÛJ jh¡Fjš bjhlL¤JŸsd®. jÈ¤JfË‹ brh¤J¡fis bfhŸisao¥gJ« mt®fË‹ thœ¡if Mjhu§fis mÊ¥gJ«jh‹ mt®fË‹ â£lÄ£l neh¡fkhf ïUªJŸsJ.vdnt ïJ xU r_f¥ bghUshjhu ïd¥gLbfhiyahf cŸsJ.

e¤j« fhyÅÆš 144 åLfS« m©zh efÇš 34 åLfS«,bfh£l«g£oÆš 90  åLfS« nrj¥gL¤j¥g£L  ïU¥gjhf (bkh¤jkhf 268) muR ju¥ò Égu§fŸ bjÇÉ¡»‹wd. Mdhš, e¤j« fhyÅia nr®ªj yjh jdJ åL  nrj¥gL¤j¥g£L bfhŸis ao¡f¥g£lhY« jd¡F v›Éj ÃthuzK« »il¡fÉšiy v‹»wh®. m©zhefÇš cŸs 50 jÈ¤ åLfËš 40 åLfŸ vÇ¡f¥g£LŸsjhf KUf‹ TW»wh®. bfh£l«g£oÆš òâa fhyÅÆš 61 åLfS« giHa fhyÅÆš 120 åLfS« ÉisÃy§fËš mikªJŸs 14 åLfS« cŸsd.ïªj 195 åLfËš 10 åLfŸ KGjhf mÊ¡f¥g£LŸsd.Ûâ mid¤J åLfS« gFâ msî jh¡f¥g£LŸsjhf k¡fŸ Tw»‹wd®.

KGikahf vÇªj åLfis x‹diu y£r %ghŒ bryÉš òâjhf f£o jUtJ vdî« vÇ¡f g£l 175 åLfisí« bkh¤j« 40.9 y£r %ghÆš Óuik¤J jUtJ vd muR m¿É¤JŸsJ.Kjyik¢r® Ãthuz ÃâÆš ïUªJ 268 FL«g§fS¡F« %ghŒ 50 MÆu« fhnrhiy tH§f¥g£LŸsJ.

ïJtiuÆY« ifJ brŒJ áiwÆš 141 ng® mil¡f¥g£L ïU¥gjhf fhtšJiw TW»wJ. 268 ng®fS¡F Kjyik¢rÇ‹ ÃâÆš ïUªJ %ghŒ 50 MÆu« fhnrhiyfŸ »il¤JŸsd. 12 y£r %ghŒ bryÉš j‰fhÈf j§FÄl§fŸ f£l¥g£L tU»‹wd. _‹W ntis czî ju¥gL»wJ.j‰fhÈf kU¤Jt ika« mik¡f¥g£LŸsJ.

# மரண தண்டனைக்கு எதிராக ஒரு வழக்கு

**மரண தண்டனைக்குரிய குற்றவாளிகள் என்று உறுதி செய்யப்பட்ட 13 நபர்களது வழக்கின் தீர்ப்பில் தவறு நேர்ந்துவிட்டதென்ற உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல், மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்னும் விவாதத்தை மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறது.**

**–V. வெங்கடேஷ், புதுதில்லி**

**பெரும் கீர்த்தி வாய்ந்த 14 முன்னாள் நீதிபதிகள் ஜனாதிபதிக்கு முறையீடு செய்து அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி மரண தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிக்கு விடுதலை அளிக்க ஆணையிடுமாறு அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 72ன் கீழ் விண்ணப்பித்திருக்கிறார்கள்.**

இந்தியாவின் 13வது ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி ஜூலை 25ம் தேதி பதவியேற்ற சில வாரங்களுக்குள்ளாகவே பெரும் கீர்த்தி வாய்ந்த 14 முன்னாள் நீதிபதிகள் வழக்கத்திற்கு மாறான முறையீடு ஒன்றை அளித்தனர். தனித்தனியான கடிதங்கள் வடிவிலான இந்த முறையீட்டில் 13 குற்றவாளிகளுக்கு மரண தண்டனை தீர்ப்பிலிருந்து விடுதலை அளிக்குமாறு அரசியலமைப்பு சட்டம் விதி 72ன் கீழ் விண்ணப்பித்திருக்கிறார்கள். இந்த 13 குற்றவாளிகள் நாட்டின் பல்வேறு சிறைகளில் இருக்கின்றனர்.

ஜனாதிபதி, இந்த விண்ணப்பத்தை உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி அவர்களின் அறிவுரைகளுக்கு ஏற்ப செயல்படுவார். 14 முன்னாள் நீதிபதிகள் விடுதலை வேண்டி முறையிடும் அளவிற்கு, இந்த 13 குற்றவாளிகளின் மீதான தீர்ப்பில் அப்படியென்ன முக்கியத்துவம் உள்ளது ?

அவர்களில் ஒரிருவர் தனிப்பட்ட முறையில் அப்படி நம்பினாலும் கூட வழக்கத்துக்கு மாறான இவ்விண்ணப்பம் மரண தண்டனை கூடாது என்னும் கொள்கை அடிப்படையில் எழவில்லை. இந்த 13 நபர்கள் மீதும் தவறான முறையில் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டதாக உச்சநீதிமன்றமே ஒத்துக்கொண்டதுதான் முக்கிய காரணமாகும். சமீபத்திய மூன்று வழக்கில் முடிவு எடுக்கும்போது, தன் ஏழு தீர்ப்புகளில் மரண தண்டனை தவறுதலாகவோ அல்லது அறிவீனம் காரணமாகவோ வழங்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றம் கூறுகிறது. இது அரிதிலும் அரிதாக நடக்கக் கூடியது. இது அரசியலமைப்பு பெஞ்ச் தீர்ப்பான பாசன் எதிர் பஞ்சாப் மாநிலம் (1980) (2 SCC 684) என்ற வழக்கில் நேர்ந்தது. சமீபத்திய மூன்று வழக்குகளான சந்தோஷ்குமார் பாரியார் vs மகாராஷ்டிர மாநிலம் (2009) (6 SCC498), திலிப் திவாரி எதிர் மகாராஷ்டிர மாநில அரசு (2010) (1 SCC 775) மற்றும் ராஜேஸ்குமார் எதிர் மாநிலம் (2011) (13 SCC 706) ஆகியவைகளாகும்.

ராஜீவ்ராவ் மற்றும் சுர்ஜா ராம் (இருவரும் ராஜஸ்தான்–ஐ சேர்ந்தவர்கள்) என இருவர் மே 4, 1996 மற்றும் ஏப்ரல் 7 – 1997ல் தவறுதலாக மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுவிட்டார்கள். முன்னாள் நீதிபதிகள் இதையும் குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் சொன்னபடி, தவறாகிப்போன தீர்ப்பு காரணமாக இது சுதந்திர இந்தியாவில் நீதி தவறிய குற்றமிழைப்பாகும். குற்ற வரலாற்றிலும் இது ஒரு கறைதான். இதனை உச்சநீதிமன்றம் ஒத்துக்கொண்டதும் மிகக் காலங்கடந்து விட்ட நிலையில்தான்.

தற்போதைய அவர்களின் கவனமும் மரணதண்டனை இருக்கலாமா அல்லது வேண்டாமா என்பது குறித்தல்ல. சொல்லப் போனால் மரண தண்டனை விதிப்பது என்பது சரியான, நியாயத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். அந்தத் தண்டனையை நிறைவேற்றும் முன்பு கவனம் செலுத்தாமல் நிறைவேற்றப்பட்டுவிட்டால் அரசு மற்றும் குற்றம் குறித்தான நீதித்துறையின் மீது கறைபடிந்து நம்பிக்கையிழக்க வைக்காமல் எதிர் காலத்தில் இருக்க வேண்டும்'' என்பதற்காக என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

மேலும் இந்த 13 வழக்குகளில் ஏன் தண்டனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்கான விளக்கங்களையும் குறிப்பிட்டிருந்தார்கள். ஜனாதிபதி ஒப்புக் கொள்ளக் கூடிய விளக்கமாக அது இருந்தது. இதில் தான், பச்சன் சிங் Vs மகாராஷ்டிர மாநிலம் வழக்கை மேற்கோள் காட்டி இப்படி "அரிதிலும் அரிதாக'' குற்ற நடவடிக்கை விசாரணையில் நடந்துவிடக் கூடும் என்று சுட்டிக் காட்டியிருந்தனர்.

பிறகு எப்படி பச்சன் சிங் தீர்ப்பு, பின்னர் பிறிதொரு வழக்கில் மாற்றி எழுதப்பட்டது என்பதையும் விவரித்திருந்தனர்.

"குற்றத்தின் தன்மை எப்படிப்பட்டது அது எவ்வளவு தீவிரமானது என்பதன் அடிப்படையில் குற்ற விசாரணை நடைபெற்று தீர்வு வர வேண்டுமே தவிர குற்றவாளி எப்படிப்பட்டவன் என்பதன் அடிப்படையிலல்ல'' (பாரா 24)

ராவ்ஜீ என்கிற ராம்சந்திரா Vs ராஜஸ்தான் மாநில வழக்கில் உச்சநீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் எழுதி இருந்தார்கள் என்று இந்த வகையான முடிவு பச்சன் வழக்குக்கு நேர்ந்த முடிவுக்கு நேர்மாறானது. அதன் பின்னர் ராவ்ஜி வழக்கு உச்சநீதிமன்றத்தின் முன்னோடி வழக்காக கைக்கொள்ளப்பட்டு இரண்டு நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற பெஞ்ச் இந்தத் தவறை கண்டுபிடிக்கும் வரை குற்றம் தொடர்பான சூழ்நிலை முன்னிலைப்படுத்தப்பட்டதன்றி குற்றவாளி முன்னிலைப்படுத்தப்படவில்லை. இதுவும் தவறென்று பாரியார் வழக்கில் 2009ம் வருடம் உச்சநீதிமன்றம் கண்டுபிடித்தது.

பாரியார் வழக்கில் நீதிபதிகள் பெஞ்சு கூறியது என்னவென்றால் எல்லா வழக்குகளிலும் குறிப்பாக மிகக் கொடிய மற்றும் தீவிர குற்றங்களில் குற்றவாளியின் சூழ்நிலை முழுவதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த வழக்கில் ஒரு இள வயதுப் பையனை பணத்துக்காக கடத்தி வந்தவன் கொன்றுவிடுகிறான். இந்த சூழ்நிலையில் குற்றம் புரிந்தவனின் வறுமை சூழ்நிலை கணக்கில் கொள்ளப்பட்டு மரண தண்டனை வழங்கப்படவில்லை. இது அரிதிலும் அரிதான சூழலாக கருதப்படவில்லை. மாறாக கடும் ஆயுட்கால தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றத்தின் வீச்சை சமூகப் பொருளாதார பின்னடைவு குறைக்காதென்றாலும் மாற்றம் விளைய வாய்ப்பிருப்பதாக கருதி ஆயுள் தண்டனை வழங்கப்படுகிறது. குற்றவாளி தனக்கு மரண தண்டனை விதிப்பதன் மூலம் மன மாற்றத்திற்கோ மறுவாழ்விற்கோ வழி இல்லாமல் போய்விடுகிறது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC)ல் பிரிவு 354 (3)ல் உள்ள முக்கியமான அம்சத்தின்படி, தண்டனை என்பது மரணமா அல்லது ஆயுளா அல்லது குறிப்பிட்ட கால தண்டனையா என்று முடிவு செய்ய அந்தத் தீர்ப்பில் அதற்கான காரணம் குறிப்பிடப்பட வேண்டும். மரண தண்டனை விதிப்பதற்கான சிறப்புக் காரணங்களும் சொல்லப்பட வேண்டும்.

**சிறப்புக் காரணங்கள்:**

பச்சன் சிங் வழக்கில் உச்சநீதிமன்றம், இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புக் காரணங்கள்'' என்ற வார்த்தையை விவரித்துள்ளது. அதன்படி, இந்தச் சட்டப் பிரிவின் அடிப்படையில் 'சிறப்புக் காரணங்கள்' என்ற வார்த்தைக்கு, ஒரு குறிப்பிட்ட வழக்கில் குற்றம் மற்றும் குற்றவாளி தொடர்பான விதிவிலக்கான, முக்கியமான சூழ்நிலைகளில் உள்ள 'விதிவிலக்கான காரணங்கள்' என்று பொருள் தரும். (நீதிமன்றத் தீர்ப்பின் பக்கம் 738, பத்தி 161)

“இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 302ல் உள்ள குற்றங்கள் உள்ளிட்டு பல்வேறு குற்றங்களுக்கு அளிக்க வேண்டிய தண்டனையை நிர்ணயிக்கும்போது, நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட குற்றத்தோடு தொடர்புடைய சூழ்நிலைகளை மட்டும் 'முதன்மையாக' கவனத்தில் கொள்ளாமல், குற்றவாளியின் சூழ்நிலைகளுக்கும் உரிய கவனம் அளிக்க வேண்டும்'' என்று பத்தி 163ல் குறிப்பிட்டுள்ளது. ஒரு வழக்கில், உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளபடி, குற்றம் சாட்டப்பட்டவரின் சூழ்நிலைகள் என்பது குற்றம் சாட்டப்பட்டவரின் மனநிலை, அவர் சாதி உள்ளிட்ட சமூகக் காரணங்களின் பிடியில் இருந்தாரா என்பதையும் உள்ளடக்கும்.

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் [ஊசஞுஊ]ல் பிரிவு 354 [3]ல் உள்ள முக்கியமான அம்சத்தின்படி, தண்டனை என்பது மரணமா அல்லது ஆயுளா அல்லது குறிப்பிட்ட கால தண்டனையா என்று முடிவு செய்ய அந்தத் தீர்ப்பில் அதற்கான காரணம் குறிப்பிடப்பட வேண்டும். மரண தண்டனை விதிப்பதற்கான சிறப்புக் காரணங்களும் சொல்லப்பட வேண்டும்.**

பாரியார் வழக்கில், இதுபற்றி இன்னமும் தெளிவாக விளக்க உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது:

பிரிவு 354(3)ஐ அமல்படுத்த 'அரிதினும் அரிதான' என்ற ஆணை ஒரு வழிகாட்டியாக உள்ளது, மேலும் ஆயுள் தண்டனை என்பது விதி, மரண தண்டனை என்பது விதி விலக்கு என்ற கொள்கையையும் வலியுறுத்துகிறது. விதி விலக்குகள் என்ற வார்த்தை குறுகிய நோக்கத்தில் புரிந்து கொள்ளப்படுகிறது. மரண தண்டனை விதித்தால், அரிதிலும் அரிதான ஆணை என்பது நீதிமன்றத்தின் மீது அதிகப்படியான சுமையை அளிக்கிறது. அதாவது அரிதிலும் அரிதான ஆணை என்பதில் உள்ள விதிவிலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பது குறித்து மதிப்பிட வேண்டும்.

பச்சன் வழக்கில் வந்த தீர்ப்பை தெளிவாகப் புரிந்துகொண்ட பின்பு பாரியார் பெஞ்ச் நீதிபதிகள் ராவ்ஜி வழக்கில் உள்ள தவறுகளை வெளிக்கொணர முடிந்தது. இந்த நீதிமன்றத்தில் “கடந்த 9 வருடங்களில் குறைந்தது 6 வழக்கு முடிவுகளில் ராவ்ஜி வழக்கு பின்பற்றப்பட்டுள்ளது. அதாவது, மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அது எங்களின் கருத்துப்படி தவறாக முடிவு செய்யப்பட்டதாகும் என்று தம் தீர்ப்பில் பத்தி 63ல் சொல்கிறார்கள்.

ராவ்ஜி வழக்கை முன்னோடியாக வைத்து தீர்ப்பு சொல்லப்பட்ட ஆறு வழக்குகளையும் பாரியார் பெஞ்சு நீதிபதிகள் குறிப்பிட்டுக் காட்டி தவறான தீர்ப்பு வழங்கப்பட்டதென்றும் கூறுகின்றார்கள். அந்த ஆறு வழக்குகளும் பின் வருமாறு:

சிவாஜி மற்றும் மகாராஷ்டிரா மாநிலம், இந்த வழக்குகளில் மோகன் அன்னா சவான் எதிர் மகாராஷ்டிர மாநிலம், பண்டு எதிர் உத்தரபிரதேச மாநிலம் (ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் இந்தக் குற்றவாளியின் தண்டனையைக் குறைத்தார்), சுர்ஜா ராம் எதிர் ராஜஸ்தான் மாநிலம் (சுர்ஜா ராமுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது), தயாநிதி பிசாய் எதிர்

# ஒரு இளம் சிறுவனின் விடுதலை

ஜூலை 7ம் தேதியன்று தவறுதலாக மரண தண்டனை பெறுவதிலிருந்து அன்குஷ் மாருதி ஷிண்டே காப்பாற்றப்பட்டான். ஒன்பது வருடங்களுக்கும் மேலாக அவன் சிறையில் கழித்தப் பிறகு நாசிக் செசன்ஸ் நீதிமன்றம் அவனை குழந்தைக் குற்றவாளி என்று அதிகாரபூர்வமாக அறிவித்தது. அதில் ஆறு வருடங்கள் மரண தண்டனை கைதிகளின் வரிசையில் அவர்களுக்கான சிறையில் கழிக்கப்பட்டது. இவனது கருணை மனுவை கவர்னர் நிராகரித்துவிட்டார். நீதிமன்றங்களும் இவ்விஷயத்தை ஆய்வு செய்ய தவறிவிட்டன.

உச்சநீதிமன்றம், விசாரணை நீதிமன்றங்கள் குற்றம் சாட்டப்பட்டவரின் வயது பற்றி முதலில் கண்டுபிடித்து விசாரிக்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப வழிகாட்டியும் கூட அன்குஷ் வழக்கு போன்ற வழக்குகள் மீண்டும் மீண்டும் வந்துகொண்டே இருக்கிறது. அன்குஷினுடைய தோற்றம் மாஜிஸ்ட்ரேட் மற்றும் விசாரணை நீதிமன்றங்களை அவனது வயது பற்றி விசாரித்தறிய தூண்டி இருக்கலாம். இருந்தும் அவன் சிறுவன்தான் என்பதற்கான மறுக்க முடியாத ஆவண ஆதாரம் இருந்த போதிலும் விசாரணை நீதிமன்றம், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் குற்றம் நடந்த தேதியில் அவனுடைய வயதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சி எதையும் மேற்கொள்ளாமல் அவனுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தன.

அன்குஷ்–ன் பள்ளி விலகல் சான்றிதழ், குற்றம் நடந்தபோது அவன் குழந்தைதான் என்று தெளிவாகக் காட்டியது. உச்சநீதிமன்றத்தால் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட பிறகு அவன் சிறுவன்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகள் சிக்கலானவை மற்றும் சோர்வளிப்பவை. இப்போது நாசிக் நீதிமன்றம் அடுத்த பகுதிக்கு மிக ஜாக்கிரதையாக செல்ல வேண்டும். ஏனென்றால், நீதிமன்றம் அன்குஷ் வழக்கின் தீர்ப்புகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களைக் கேட்டதால் இந்த விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு பதிவு எண் அளிக்கப்பட பல மாதங்கள் ஆயின.

விசாரணையின்போது விசாரிக்கப்பட வேண்டிய சாட்சிகளுள் அன்குஷ்–ன் தாயாரும் ஒருவர். அன்குஷ்–ன் உறவினரான, மரண தண்டனை அளிக்கப்பட்ட சக குற்றம் சாட்டப்பட்டவரான ராஜூ மாஷு ஷிண்டேயின் மனைவியோடு அன்குஷ்–ன் தாயார் நீதிமன்றத்திற்கு வந்தார். நாக்பூரிலுள்ள மத்திய சிறைச்சாலையில் உள்ள மகனை வீடியோ கான்பரன்சிங் மூலம் திரையில் பார்த்தார். அன்றைய நாளின் இறுதியில் அவர் (அவன் தாய்) விரும்பியதெல்லாம் அன்குஷ் தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுவானா என்பதுதான். இனிமேல் பார்க்கவே முடியாது என்று போவதைவிட அவன் காலம் முழுவதையும் ஜெயிலிலேயே கழித்தால்கூட பரவாயில்லை என்று நினைத்தார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்குஷ் சட்டத்தின் முன் ஒரு சிறுவன்தான் என்று முடிவு அறிவித்த நீதிமன்றத்தின் ஆணை தைரியமானதும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும். குற்றத்தின் தன்மை, உச்சநீதிமன்றத்தின் மரண தண்டனை அல்லது அரசு தரப்பு வழக்கறிஞரின் உணர்ச்சிகரமான வாதம் ஆகியவற்றின் அழுத்தத்தினால், இந்த முடிவு மாறியிருக்கலாம். அன்குஷ்–ஐ போலவே இன்னும் பலர் மரண தண்டனை தீர்ப்பு பெற்று வரிசையில் காத்திருக்கும் சிறுவர்களாகவும் சட்டத்தின் பாதுகாப்பை பெற வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் வழக்குகள் விசாரிக்கப்படாமலே இருக்கின்றன.

**விஜய ஹையர்மெத்**
(மும்பை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்)

ஒரிசா மாநிலம், உத்திரபிரதேச மாநிலம் எதிர் சத்தான் (இவ்வழக்கில் உபேந்திரா எனும் குற்றவாளியும் உண்டு). ராவ்ஜி வழக்கு, கொடுமையான குற்றங்களில், குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்புடைய சூழல் ஏற்புடையதல்ல என்ற கருத்துக்கு ஏற்றதாக மட்டுமில்லாமல் நம்பக் கூடியதாகவும் கருதப்படுகிறது என்பது தெளிவாகிறது. (பத்தி 63) என்று பாரியார் பெஞ்ச் குறிப்பிட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தால் ஏழு குற்றவாளிகளின் சூழ்நிலை பற்றி எந்த கவனமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று பெஞ்ச் கவனித்துக் கூறியது. பச்சன் சிங் வழக்கு முன்னோடி வழக்காக இருந்தும் ராவ்ஜியின் முடிவு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆறு வழக்குகளின் முடிவுகள், தண்டனை அளிப்பதற்கு, குற்றம் தொடர்பான சூழ்நிலைகளை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் அளவில் குறுக்கிவிட்டது.

**சாய்பன்னா வழக்கில், ஏற்கெனவே ஆயுள் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரு கைதிக்கு அதே காலத்தில் மேலும் ஓர் ஆயுள் கால தண்டனை வழங்கப்படலாமா என்பது குறித்த சந்தேகம் உச்சநீதிமன்றத்திற்கு எழுந்தது.**

பாரியார் பெஞ்சு நீதிபதிகள் ராவ்ஜி வழக்கைப் பின்பற்றி எழுதப்பட்ட தீர்ப்புகள் தவறுதலாகச் சொல்லப்பட்டவை என்கின்றனர். பிறிதொரு வழக்கான அன்குஷ் மாருதி ஷிண்டே மற்றும் பலர் எதிர் மகாராஷ்டிர மாநிலம் (2009) (6SCC 667) வழக்கில் வெளிப்படையாக ராவ்ஜி வழக்கு சொன்ன காரணங்கள் அடிப்படையாய் எடுத்துக் கொள்ளப்பட்டது. இது பாரியார் வழக்கின் தீர்ப்புக்கு சில நாட்கள் முந்தையதுதான். இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் ஆறு நபர்களுக்கு மரணதண்டனை உறுதி செய்தது. அதில் ஒரு நபர் குழந்தை என்பதால் அது நிறைவேற்றப்படக் கூடாதது (பெட்டிச் செய்தி காண்க). எனவே, முன்னாள் நீதிபதிகள் இவர்களுடைய தண்டனையையும் குறைக்குமாறு வேண்டி ஜனாதிபதிக்கு முறையீடு செய்திருக்கிறார்கள்.

**தண்டனைக் குறைப்பு நியாயமானது:**

ராவ்ஜி வழக்கின் தவறான முன்னுதாரணத்தை பின்பற்றியதால் பாரியார் தவறிழைத்த இந்த ஆறு வழக்குகளோடு மரண தண்டனை குறைக்கப்பட்ட வேறு ஒரு வழக்கையும் அது சுட்டிக்காட்டியது. அது சாய்பன்னா எதிர் கர்நாடக மாநிலம் (2005) வழக்காகும். சாய்பன்னா ஒரு ஆயுள் கைதி, பரோலில் வந்தபோது தன் மனைவியையும் மகளையும் கொன்றுவிட்டான். உச்சநீதிமன்றம் சாய்பன்னாவிற்கு மரண தண்டனை வழங்கியது. இதற்கு, ஒரு ஆயுள் கைதி தவறிழைக்கும்போது மரண தண்டனைதான் கட்டாயம் என்று காரணம் சொல்லப்பட்டது. உச்சநீதிமன்றம், மித்து எதிர் பஞ்சாப் மாநிலம் (1983) வழக்கில், தவறிழைக்கும் ஆயுள் கைதிக்கு மரண தண்டனையை கட்டாயமாக்கிய இந்திய தண்டனைச் சட்டம் 303 பிரிவை ஏற்கெனவே தள்ளுபடி செய்தது. எப்படியெனில் மரணதண்டனை உறுதி என்றால் கைதி தரப்பு நியாயத்தை விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன எனவே மரண தண்டனை விதிப்பதற்கான காரணங்களை விளக்குவது அர்த்தமற்றதாகிவிடுகிறது. கொலைக் குற்றத்திற்கான தண்டனைக்கு மாற்றாக மற்றும் சட்டப்படி, கொலைக்கு சாதாரண ஆயுள் தண்டனை வழங்கப்பட்டால், மரண தண்டனை அரசியல் சட்டப்படியானது என்பதே பச்சன் சிங் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையான சட்டக் கொள்கையாகும். எனவே, மரண தண்டனை என்பது மாற்று வழி அடைக்கப்பட்ட அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று பச்சன் சிங் வழக்கில் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (நீதிமன்றத் தீர்ப்புக்கான சட்ட அடிப்படை கொள்கைபடி 5 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் சொல்வது உச்சநீதிமன்றத்தின் மற்ற நீதிபதிகளையும் கட்டுப்படுத்தும், கட்டுப்படுத்தாதது எப்போது என்றால் ஐந்து நீதிபதிகளுக்கு மேல் எண்ணிக்கையுள்ள நீதிபதிகள் பெஞ்ச்–ல் புறக்கணிக்கப்பட்டால்தான். பச்சன் சிங் வழக்கில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் தான் தீர்ப்பை எழுதியது.)

சாய்பன்னா வழக்கில், ஏற்கெனவே ஆயுள் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரு கைதிக்கு அதே காலத்தில் மேலும் ஓர் ஆயுள் கால தண்டனை வழங்கப்படலாமா என்பது குறித்த சந்தேகம் உச்சநீதிமன்றத்திற்கு எழுந்தது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி தீர்த்து கொள்வதைவிட எளிதான முறையில் சாய்பன்னா மீது மரண தண்டனை விதித்து உச்ச நீதி மன்றம் இந்த சந்தேகத்தை தீர்த்துக்கொண்டது. எனவே, சாய்பான்னா வழக்கில், தான் அளித்த தீர்ப்பு, மித்து மற்றும் பச்சன் சிங் வழக்கின் தீர்ப்புகளோடு தொடர்பில்லாததாக இருக்கிறது என்று பாரியார் வழக்கில் உச்சநீதிமன்றம் அறிவித்தது. விளைவு, ஒரு பிரச்சனை தொடர்பாக ஒரு நீதிமன்றம் தான் முன்னர் அளித்த தீர்ப்புகளை கவனத்தில் கொள்ளாமல் வேறு தீர்ப்பு அளிக்கப்பட்ட நிகழ்வு நடந்துள்ளது (Per incuriam).

# ஒரு முன்னோடி வழக்கு புறக்கணிக்கப்பட்டது.

1937ஆம் ஆண்டு, கொலைக்கான நிலையான தண்டனையாக தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு வந்த காலம் அது. ஆதப்பக்கவுண்டனின் குற்ற மேல்முறையீடு வழக்கினில் தீர்ப்பளிக்கும்போது சென்னை உயர்நீதிமன்றம் சாட்சிகள் சட்டம் பிரிவு 27 பற்றிய முரண்பட்ட கருத்துகள் குறித்து கவலைக் கொண்டது. குற்றம் செய்ததாய் ஒப்புக்கொண்ட வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வதா அல்லது சேர்க்காதிருப்பதா என்பதில்தான் முரண்பட்ட கருத்துக்கள் வந்தன. ஒருவரின் வாக்குமூலத்தில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட பகுதியை ஏற்றுக்கொண்டால் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட்டு தூக்கிலிடப்படுவார்.

சட்டத்தின் கேள்வியை, இந்த அமர்வு, நீதிமன்றத்தின் முழு அமர்விற்கு பரிந்துரைத்தது. நீதிமன்றத்தின் முழு அமர்வு சாட்சிகள் சட்டம் சட்டப்பிரிவு 27 ஒருவரது வாக்குமூலத்தில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட பகுதியையும் உள்ளடக்க வேண்டும் என்று கூறியது. இந்தக் கருத்து சென்னை மாநிலத்தில் மட்டுமல்லாமல் பிரிட்டிஷ் இந்தியாவின் இதர பகுதிகளிலும் பின்பற்றப்பட்டது. இந்தத் தீர்ப்பின் அடிப்படையில், கவுண்டனும் மற்றும் பல கைதிகள் பிரிட்டிஷ் இந்தியாவில் தூக்கில் இடப்பட்டனர்.

1945ம் வருடம் பிரிவு 27 பற்றி (சாட்சிகள் சட்டம்) மேலும் விவாதிக்கப்பட்டது. மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் புலுக்குறி கோட்டையா மற்றும் எழுவர் சம்மந்தப்பட்ட வழக்கில் அவர்களுக்கு தூக்கு தண்டனை விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேல் முறையீடுகள், கவுண்டன் வழக்கின் அடிப்படையில் மறுக்கப்பட்டது. கைதிகள் அந்தரங்கமான சபையில் (privy council) மேல்முறையீடு செய்தபோது வாக்குமூலத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பகுதியை உள்ளடக்கக்கூடாது என்பதே பிரிவு 27ன் சரியான புரிதல் (விளக்கம்) என்று சொல்லி கவுண்டன் வழக்கின் தீர்ப்பை மீறி அவர்களை விடுதலை செய்தது.

கதை அங்கே முடியவில்லை. கவுண்டன் தீர்ப்பின் அடிப்படையில் பலருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது மற்றும் பலர் மரண தண்டனையை எதிர்பார்த்து வரிசையில் இருந்தனர். கவுண்டன் தீர்ப்பின் அடிப்படையில் தண்டனை பெற்ற அனைத்து வழக்கினையும் ஆய்வு செய்ய ஒரு ஆணையத்தை சென்னை மாநிலம் நிறுவியது. இந்தியா முழுதும் மிகப் பலர் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ராவ்ஜி குழுவினர் பற்றி உச்சநீதிமன்றமே, தவறுதலான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பிரகடனப்படுத்தி இருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த இரண்டு வருடங்களாக மத்திய மாநில அரசுகள், ஜனாதிபதி, ஆளுநர்கள் ஆகியோருக்கு எண்ணிலடங்கா கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை எந்தவித விளைவும் ஏற்படவேயில்லை. 72 வருடங்களுக்கு பின்பு இந்திய அரசு ராவ்ஜி வழக்கை பாரியார் வழக்கு ஒதுக்கியபோது இந்திய அரசு கவலைப்பட்டதைவிட தவறுதலாக மரண தண்டனை விதிக்கப்பட்டுவிட்ட இந்தியர்கள் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் கவலை கொள்ளுமா? அல்லது வெறும் சட்ட ஆட்சி என்பது பற்றி மட்டுமே அக்கறை எடுத்துக் கொள்ளுமா?

நீதிபதிகளின் விண்ணப்பத்தின்படி 13 குற்றவாளிகளில் பண்டுவின் மரண தண்டனை ஜனாதிபதி பிரதிபா பாட்டீலினால் குறைக்கப்பட்டது. இவ்வருடம் ஜூன் மாதத்தில்அடுத்த குற்றவாளியான அன்குஷ் மாருதி சிண்டே குழந்தை என்று அறிவிக்கப்பட்டதால் மரண தண்டனை வரிசையில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார். தயாநிதி பிசாயின் மரண தண்டனை 2003ம் வருடத்தில் ஒரிசா கவர்னரால் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுவிட்டது. ஜூலை 2011ல் ஜனாதிபதி பிரதிபா பாட்டீலால் உபேந்திரா மற்றும் சத்தான் ஆகியோரின் மரண தண்டனை குறைக்கப்பட்டுவிட்டது.

இதுபோல, பாரியார் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் அந்த வரிசையில் இப்போதைக்கு 8 பேருக்கு மட்டுமே மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட வேண்டும். இவற்றின் சாய்பன்னாவின் கருணை மனு மட்டும்தான் ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் அலுவலகத்தில் அவரின் பதவிக் காலம் முடியும்போது, பதிலளிக்கப்படாமல் இருக்கிறது. ஒரு வருடத்துக்கு முன்னாள் இந்த வழக்கு ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டபோதும் சாய்பன்னாவின் மரண தண்டனையை குறைப்பது பற்றி மத்திய உள்துறை அமைச்சகம் ஏன் பரிந்துரைக்கவில்லை என்பது தெளிவாக சொல்ல முடியவில்லை. தனது 5 வருட பதவிக் காலத்தில் இரண்டரை வருடத்துக்குள் 35 மரண தண்டனையை ரத்து செய்த பிரதிபா பாட்டீல் அரசு சிபாரிசு செய்திருந்தால் சாய்பன்னாவின் மரண தண்டனையையும் கூடத்தான் ரத்து செய்திருக்க முடியும்.

மீதமுள்ள குற்றம் சாட்டப்பட்ட ஏழு பேரின் கருணை மனு ஜனாதிபதியை சென்றடையவில்லை. பெரும்பாலானவர்களின் மனு அவர்கள் எந்த மாநிலச் சிறையில் தண்டனைக்குக் காத்திருக்கிறார்களோ அந்தந்த மாநில கவர்னர்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. பிரதிபா பாட்டீல் தன் பதவிக்காலம் முடிந்த ஜூலை 24ம் தேதியன்று அவருக்கு பின் வருபவர்கள் அவ்வளவு

எளிதாக மறுக்க முடியாத ஒன்றை செய்து முடித்திருந்தார். அவருக்கு முன் பதவியில் இருந்தவர்கள் முடிவு செய்யாத 23 மனுக்களோடு தொடங்கிய அவர் தன் பதவிக்காலத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்ட 40 பேரை உள்ளடக்கிய 9 புதிய மனுக்களைப் பெற்றார்.

இவற்றில் 18 மனுக்களை ஏற்றுக்கொண்டு (35 கைதிகளுடையது) மூன்றை (5 கைதிகளுடையது) நிராகரித்தார். முடிவு செய்யாத 11 மனுக்களை (16 கைதிகளுடையது) தமக்கு பின் வர உள்ள பிரணாப் முகர்ஜி முடிவு செய்து கொள்ளுமாறு விட்டுச் சென்றிருக்கிறார். அவர் இந்த வருடத்தில் ஜூன் 2ம் தேதி தண்டனையைக் குறைத்த 35 கைதிகளுள் ஒருவரான பந்து பாபுராவ் ஜனாதிபதியின் முடிவுக்கு காத்திருக்கும்போது 2007 அக்டோபர் 18 அன்று இறந்துவிட்டார். அவரின் தண்டனையை குறைப்பதற்காக உள்துறை அமைச்சகம் பரிந்துரை செய்தபோது அவர் இறந்த செய்தி உள்துறை அமைச்சகத்துக்கு சென்று சேரவில்லை. முன்னரே அவரின் கருணை மனு ஏற்கப்பட்டிருந்தால் ஒரு வேளை பாபுராவ் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்திருப்பாரா என்பது விவாதத்துக்குரியது.

பிரதிபா பாட்டீலின் சரித்திரம் என்பதை எண்ணிக்கையோடு மட்டும் இணைத்துப் பார்க்கக்கூடாது. அவரது அணுகுமுறை சார்ந்த பண்பும் அதில் இருக்கிறது. புதிய அரசாங்கத்தில் அமைச்சர் மாறும்போது அல்லது மத்திய அமைச்சகம் மாற்றி அமைக்கப்படும்போது கருணை மனு சார்ந்த தனது பரிந்துரைகளை உள்துறை அமைச்சகம் மாற்றியிருக்கிறது. ஒரு உள்துறை அமைச்சர் ஒரு கைதியின் கருணை மனுவை நிராகரிக்க பரிந்துரைத்தால் அவருக்கு அடுத்து வருபவரும் அவ்வாறே செய்வார் என்பதில்லை. எனவே, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மரண தண்டனையை ரத்து செய்யப் பரிந்துரைத்த பல வழக்குகள் அவருக்கு முன்னர் உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ்பாட்டில் அல்லது எல்.கே.அத்வானியால் நிராகரிக்கப்பட்டிருக்கும்.

இதன்படி பிரதிபா பாட்டீல் பதவி ஏற்றதும் தனது பதவிக் காலத்தின் முதல் பகுதியில் 2009ம் வருடம் பொது தேர்தலுக்குப் பிறகு புதிய அரசாங்கம் நிர்மாணிக்கப்படும் வரை காத்திருந்தார். அதாவது நிலுவையில் உள்ள கருணை மனுக்கள் தேர்தலுக்கு பின் பதவியேற்கும் உள்துறை அமைச்சரால் பரிசீலிக்கப்படும் வரை காத்திருந்தார். சட்டத்தின்படி ஆட்சியில் இருக்கும் உள்துறை அமைச்சரின் பரிந்துரையைத்தான் அவர் கேட்க வேண்டும். முந்தைய அமைச்சரவையின் பரிந்துரையை அவர் கேட்க வேண்டிய அவசியமில்லை. எனவே, அவர் ரத்து செய்ய வேண்டும் என அரசாங்கம் விரும்பிய கருணை மனுக்களின் மீதான முடிவுகளை தாமதப்படுத்துவது பொறுத்தமாக இருக்கும் என்று அவர் கருதினார் என்று நாம் புரிந்துகொள்ளலாம். அடுத்தடுத்த மத்திய உள்துறை அமைச்சர்கள் ஒரு கருணை மனுவை ரத்து செய்வதற்காக பரிந்துரைத்தால் அந்த மனுவின்மீது தான் முடிவு செய்வதற்கான வாய்ப்புகள் மூடப்பட்டுவிடும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

“நிலுவையில் உள்ள ஒவ்வொரு கருணை மனுக்களைப் பற்றி அரசால் உரிய ஆழமான விவாதம் நடைபெறுவதை அவர் உறுதிப்படுத்தினார்” என்று அவரின் உதவியாளர் இப்பத்திரிகையாளரிடம் கூறினார்.

**பச்சன் சிங் வழக்கு முன்னோடி வழக்காக இருந்தும் ராவ்ஜியின் முடிவு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆறு வழக்குகளின் முடிவுகள், தண்டனை அளிப்பதற்கு, குற்றம் தொடர்பான சூழ்நிலைகளை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் அளவில் குறுக்கிவிட்டது.**

நிலுவையில் உள்ள கருணை மனுக்களின்மீது, ப.சிதம்பரத்துக்கு முந்தைய அமைச்சர்களின் அறிவுரை அல்லது பரிந்துரைகள் அவருக்கு திருப்தி அளிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. “அரசாங்கம் அறிவுறுத்தியபடி ஒவ்வொரு வழக்கிலும் உள்ள குற்றத்தைக் குறைவாகக் காட்டுவதற்குரிய காரணங்களை / சூழல்களை அவர் கவனத்தில் எடுத்துக்கொண்டார்” என்றும் அவர் உதவியாளர் நம்மிடம் கூறினார்.

ஜனாதிபதியால் கருணை மறுக்கப்பட்ட ஐந்து கைதிகளின் கருணை மனுக்கள் பற்றிய கோரிக்கை மீதான விவாதத்தில் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை அளிக்கும்போது, உள்துறை அமைச்சகமும் ஜனாதிபதியும் இத்தகைய மனுக்களை எவ்வாறு கையாள்கிறார்கள் என்பது பற்றிய தெளிவான விளக்கம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, தவறுதலாக மரண தண்டனை அளிக்கப்படுவதை தடுப்பதற்கான சட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக செயல்படவில்லை என்று நம்புவதற்கான போதுமான காரணங்கள் உள்ளது. மரண தண்டனையை ஒழிப்பதற்கு சாதகமான உலகளாவிய இயக்கத்தை இனிமேலும் இந்தியா ஒதுக்கிவிட முடியாது.

**– யுக்மோஹித்**

ஆதாரம்: FRONTLINE, செப்டம்பர் 7, 2012

# சிவகாசி நம் தீபாவளி விளக்குகளின் பின்னுள்ள சுமை

கடந்த ஆறு வருடங்களில் 84 விபத்துகள், 185 உயிர்பலி கடந்த 50 வருடங்களாக மாறாத ஒரு கதை தமிழ்நாட்டிலுள்ள பட்டாசு நகரம் என்ற அவகீர்த்தியான நகரமான சிவகாசி பற்றி..

– T.S. சுதிர்

அவள் பேசுவது காதிலேயே விழவில்லை. ஆனால் அவள் விழிக்கின்ற ஒவ்வொரு விநாடியும் அவள் கன்னத்தில் விழுந்து முகத்தை நனைக்கின்ற அக்கண்ணீர் கடந்த வாரத்திலிருந்து பெரிதாக பேசத்தான் செய்கிறது. 10 மாதங்களுக்கு முன்பு, சத்யா சந்தோஷமான மணமகள், குழந்தைப் பருவக் காதலன் வேல் முருகனை திருமணம் செய்து கொண்டாள்.

வேல் முருகன், அவள் குழந்தையாய் இருந்ததிலிருந்து விரும்பி அன்பு வளர்ந்தவன். அவர்களின் இரண்டு குடும்பங்களின் வேற்றுமைகளை சமாளித்து ஒருவழியாய் சமாதானம் செய்து திருமணம் செய்து கொண்டார்கள். ஏனென்றால் இருவருமே அட்டவணை சாதியிலிருந்தாலும் வேறு வேறு கிளை சாதியைச் சேர்ந்தவர்கள். செப்டம்பர் 15ம் தேதிதான் சத்யா வேல்முருகனை கடைசியாகப் பார்த்தது. அதுவும் எப்படி விருதுநகர் மாவட்டத்திலிலுள்ள சாத்தூர் அரசு மருத்துவமனையில் ஸ்டெச்சரில் ஆடாமல் அசையாமல் குளிர்ந்து போய் பிணமாக.

20 வயதுப் பெண்ணான அவள் வெட்ட வெளியில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருககிறாள். அவளின் ஒரு பகுதி வேல் முருகனுடன் செத்துப் போய்விட்டதென்பது வெளிப்படையாக தெரிகிறது.

22 வயதான வேல், கடந்த வாரம் சிவகாசிக்கு அருகிலுள்ள முதலிப்பட்டியில் பட்டாசு ஆலை வெடித்து சாவுக்கு இரையான 38 பேர்களில் ஒருவன். மதன் பட்டாசு ஆலையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் வேல், அருகிலுள்ள ஓம் சக்தி பட்டாசு ஆலையில் நடந்த தீ விபத்தை வேடிக்கை பார்க்கச் சென்றபோது ஒரு பெரிய கல் அவன் தலையில் விழ அந்த இடத்திலேயே இறந்தான். தன் வளரும் வயதில் பாதி நாட்களை பட்டாசுத் தொழிலிலேயே கழித்தவன். தனது 9ம் வகுப்பில் பள்ளியிலிருந்து நின்ற பிறகு 14 வயதில் மாங்கனீஸ், உலகத்துக்கு அறிமுகமானான். மாங்கனீஸ் மட்டுமா ? கந்தகம், பொட்டாசியம் போன்ற எல்லாமும்தான். இந்த மூன்றின் இரசாயனக் கலவைதான் பட்டாசுக்கான திட உணவுப் பொருளாகும். இந்த பட்டாசு ஆலையில்தான் சத்யாவுடனான அவன் காதலும் மெல்ல மெல்ல அரும்பியது. அவர்கள் காதலை வளர்த்த அந்த வேலைதான் அவனுக்கு சாத்தானாகவும் வந்து வாய்த்தது.

சிவகாசியிலுள்ள பிச்சாண்டித் தெரு முழுவதும் சாவுத்துக்கம் கப்பி இருந்தது. அந்த புதன்கிழமை மூன்று ஆண்கள் வீடு திரும்பவில்லை. மூன்று பேரும் நெருங்கிய நண்பர்களும் பள்ளி இடை நின்றவர்களும் ஆவர். வேல், காளிராஜ்மற்றும் சந்திரமோகன் என்ற மூவர்தான் அது. மூவரும் மதன் பட்டாசு ஆலை, ஓம் சக்தி பட்டாசு ஆலை விபத்தில் உயிர் இழந்தவர்கள். ஒரு சிலரைக் காப்பாற்ற நினைத்து அங்கு போனார்களோ அல்லது வேடிக்கை பார்த்துவிட்டு வரலாம் என்ற போனார்களோ ? ஒருவரும் திரும்பி வரவில்லை.

''நான் ஒரு புற்றுநோயால் தாக்கப்பட்ட நோயாளி'' என்று சந்திர மோகனின் தாய் பரிமளா சொல்கிறார். என்னை என் மகன் ஒரு கடின வேலையும் செய்ய விடமாட்டான். எங்கு போக வேண்டுமானாலும் சைக்கிளில்தான் வைத்துக் கூட்டிப்போவான். இனி எனக்கு யார் இருக்கிறார்கள்'' என்று அழுது கொண்டே கைகளை விரிக்கிறார். தன் கேள்விகளுக்கு யாரும் பதிலளிக்க முடியாது என்னும் அவலமும் அவருக்கு தெரியத்தான் செய்கிறது.

அவர் மகள் சாந்தியம்மாள் மேலும் துக்கத்தில் இருக்கிறாள். 18 மாத குழந்தையை வளர்க்கும் தான், தன் மகனை இந்தத் தொழிலுக்கு அனுப்பமாட்டேன் என்று சொல்லிப் புலம்புகிறார். தற்காலிக வெளிச்சத்தை கொட்டி இறைக்கும் பூச்சட்டி (Flower Pot) என்னும் மத்தாப்பு பின்பு விட்டுச் செல்வது, கரிக்குப்பையும் இருட்டும்தான் என்று அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.

அடுத்த சந்தில் ஒரு ஒலி பெருக்கியில் ரஜினிகாந்த் படப் பாடல் ஒலித்துக் கொண்டும் அலறிக்கொண்டும் இருப்பது சிவகாசியின் இதயமில்லா தன்மையை வெளிகாட்டுவது போல் இருந்தது. ஒரு பெண் பூப்பெய்தியதற்காக ஒரு வீட்டில் நடக்கும் விழாவில்தான் இந்தக் கோலாகலம். காளிராஜின் பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் துக்கம் கேட்க மிகப்பெரிய கும்பல் ஒன்று நுழைகிறது. சந்தோஷமும் துக்கமும் அடுத்தடுத்து நடப்பது சோகம் முடிந்ததும் அடுத்ததாக நடக்கும் வாழ்க்கையை சுட்டிக்காட்டுவது போலவும் இருந்தது. அதிலும் ராக்கெட் வெடி ஒன்று தீபாவளி இரவில் பொருத்தி வைப்பதும் அது புறப்பட்டு போனதும் அடுத்த ராக்கெட் பொருத்திட தயாராவது போல இருந்தது.

உடல் ஊனமுற்ற காளிராஜ்–ன் தந்தை கல்லாகிப் போன முகத்தோற்றத்துடன் இமைக்காத விழிகளுடனும் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார். அவருடைய மூத்த மகன் குருசாமி தன் மகன் காளிராஜ்–ஐ நினைத்து அவர் கலங்கிப் போய் இருக்கிறார் என்கிறார். புதன்கிழமையை அக்குடும்பத்தினர் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஏனென்றால் அன்றுதான் காளிராஜ்–ன் சகோதரி பத்திரகாளியை ஒரு மாப்பிள்ளை வீட்டார் வந்து பார்க்கப் போவதாக முடிவாகி இருந்தது. ஆனால், அந்தோ? அன்று காளிராஜ்பிணம் வீட்டுக்கு வந்து சேர்ந்தது.

இந்தப் பகுதிகளில் விபத்துகளினால் சாவு என்பது ஒன்றும் புதியதான விசயமில்லை. கடந்த ஆறு வருடங்களில் மட்டும் 84 விபத்துகள் நடந்து 185 நபர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கத்தான் வேண்டும் என்பது தவிர்க்க இயலாததுதான். அதனால்தான் 2010ம் ஆண்டு பெரியாண்டவர் பட்டாசு ஆலையில் தன் மாமா அசோக் நெருப்பினால் உயிரிழந்த போதும் மருமகன் அந்தோணிராஜ்அதே தொழிலில் இறங்கிட யோசிக்கவில்லை. அதே தொழிலில் இறங்கினார். கடந்த வாரம் அதே விபத்தினால் இறந்து போனவர்களில் அந்தோணி ராஜுூம் ஒருவர். அதே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் இன்னமும் அதே தொழிலில் வெவ்வேறு பட்டாசு ஆலைகளில் வேலை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சிவகாசியில் மாற்றுத் தொழில் என்று வேறு எதற்கும் வழியில்லாததுதான் இதற்கெல்லாம் காரணம். ஒன்றரை லட்சம் மக்களை தொழிலாளர்களாக கொண்டு இயங்கும் 700க்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகளில் இந்தியாவின் 90 சதவீத பட்டாசுகள் உற்பத்தியாகின்றன. இதில் பணி செய்பவர்கள் அனைவரும் இளம் வயதினர். பள்ளியில் புத்தகங்களை சுமப்பதற்கு பதிலாக பூச்சட்டி, அணுகுண்டு மற்றும் ராக்கெட் போன்ற வெடிகள் தயாரிப்பதில் முனைந்து ஈடுபட்டுவிட்டவர்கள் உதாரணமாக மீனாட்சி பட்டாசு ஆலையில் வேலை பார்க்கும் பஞ்சவர்ணத்தை சொல்லலாம் ஏழாம் வகுப்பில் இடைநின்ற பின்பு கடந்த இரண்டு வருடங்களாக அணுகுண்டு வெடியில் திணித்து வைக்கப்படும் திரியை செய்து கொண்டிருக்கிறாள். ஆனால், கணக்கை சரியாகப் போடமாட்டாள் போலிருக்கிறது. தன்னுடைய வயது 20 என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். ''என் வேலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஒரு நாளுக்கு ரூ.150 வரை சம்பாதிக்கிறேன்'' என்கிறாள்.

பட்டாசு ஆலைகளில் வேலை பார்க்கும் குழந்தைகளுக்கு டுடோரியல் நடத்தும் மனித உரிமை மற்றும் கல்வி நிறுவனத்தைச் (Human Rights and Educational Organisation) சேர்ந்த அந்தோணி செல்வம் சொல்கிறார். ''இந்த தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைகளின் எண்ணிக்கை முன்பைவிட தற்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. தற்போதைய எண்ணிக்கை 3000 போல இருக்கக்கூடும். அதுவும் 14 வயதிலிருந்து 17 வரையிலான வரம்பிலிருப்பவர்கள்'' என்கிறார். மாநில புள்ளிவிவரக் கணக்கொன்று 1990களின் நடுவில் எடுக்கப்பட்டபோது இவர்களின் எண்ணிக்கை 30,000க்கு மேல் இருந்தது.

இந்தத் தொழில் எப்பொழுதும் முன்னணியில் இருக்கும் ஒரு தொழிலாகும். இரண்டாம் இடத்தில் உள்ள ஸ்ரீ காளிஸ்வரி பட்டாசு தொழிற்சாலையின் (ஆண்டுக்கு ரூ.150 கோடி) 7,000 பணியாளர்களில் 500 பேர் ஒவ்வொரு ஆண்டும் மாறிக்கொண்டே இருக்கின்றனர். அந்த அளவிற்கு வறுமையும் பசியும் இருப்பதால் ஒரு தொழிற்சாலையில் வேலை பார்க்கும் பணியாளரை அதற்கு போட்டி நிறுவனம் சில 100 ரூபாய்கள் அல்லது வேலை நேரத்தின்போது தேநீர் மற்றும் சிற்றுண்டி அளிக்கப்படும் என்ற உறுதிமொழியின் பேரில் தனது தொழிற்சாலைக்கு இழுக்க முடியும்.

இதன் மூலம் நமக்கு தெரிய வருவது என்னவென்றால், இரசாயனக் கலவையில் எவற்றை சேர்க்கக்கூடாது என்ற தொழில்நுட்பம் தெரிந்த நபர்கள் ஆலைகளில் பணியில் இல்லை. சூப்பர் வைசர் அல்லது இயந்திரப் பணியாளர் (Fore man) வேலை செய்துகொண்டே வேலையைக் கற்றுக் கொள்வது என்பது பேராபத்தாகத்தான் முடியும். தொழில்நுட்ப மனநிலை என்பதே நிலாவைப் பிடிக்க நினைப்பது போன்றதுதான். இந்த யூனிட்டுகளை நான்கு மாதத்திற்கு ஒரு முறை மேற்பார்வை செய்யும் ஆலை ஆய்வாளர் சொல்வது என்னவென்றால் இந்தப்பணி செய்பவர்களில் 70 சதவீதத்தினர் விதிமுறைகளை மீறத்தான் செய்கிறார்கள் என்கிறார்.



முந்தைய விபத்தில் தீக்காயம்பட்ட இந்தப் பெண்ணுக்கு இதுவரை எந்த ஒரு இழப்பீடும் வழங்கப்படவில்லை.

எந்த ஒரு மனிதரும் கைகளில் உறைகளோ தலையில் முகமூடி போன்ற பாதுகாப்பு கவசத்துடன் வேலை செய்வதில்லை என்பது சிவகாசியில் ஆலைகளை ஒரு சுற்று சுற்றி வந்தால் உங்களுக்குத் தெரியவரும். மிகப்பெரிய ஆலைகள் என சொல்லப்படும் இடங்களிலும் இதே அவலம்தான். ரப்பர் பாய்கள் உபயோகப்படுத்தப்பட வேண்டும் அதுவும் காண்பதரிதுதான். முதலாளிகளின் பேராசை காரணமாக மரங்களின் அடியிலும் வெட்ட வெளியிலும் உள்ள காலியிடங்களை சிறு தயாரிப்பாளர்களுக்கு உள் ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விட்டுவிடுகிறார்கள். இதுபற்றி எல்லாம் கேள்வி கேட்க பயிற்சி இல்லாத தொழிலாளிக்கு, நிபுணத்துவப் புரிதலோ, வேலை போய்விடுமே என்ற பயமிருப்பதால் மன தைரியமோ இருப்பதில்லை.

வெட்ட வெளியில் ரசாயனப் பொருட்களை கையாள்வது அவ்வப்போது நடைபெறும் பொதுவான விதிமுறை மீறல்களில் ஒன்று. வெடிகளைப் போட்டு வைப்பது, எப்படி நெருப்பு பரவுவதற்கு ஏதவாக ஓம் சக்தி ஆலையில் நிகழ்ந்தது என்பதைக் காவல்துறை சுட்டிக்காட்டினார்கள். "அதிகப்படி கூட்டம் சேர்வது இன்னொரு பிரச்சனை. இராசயனப் பொருள் இருக்கும் அறையில் இருவருக்கு மேல் இருக்கக்கூடாது என்பது விதி. ஆனால், ஆறு முதல் எட்டு நபர்கள் இருக்கிறார்கள்" என்று விருதுநகர் மாவட்ட காவல்துறை ஆணையர் நஜ்மல் கோடா கூறினார்.

வேலை நெருக்கடி நேரங்களில் தற்காலிகமாக பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வது இங்கே பொது வழக்கமாக இருக்கிறது. இது முதலாளிகளுக்கு மிகவும் சாதகமான ஒன்றாகும். இதுபோல விபத்துக்களில் அவர்களுக்கு நஷ்டஈடு என்று எதுவும் கொடுக்க வேண்டியது இல்லை. செப்டம்பர் 5ம் தேதியன்று அங்கு 300 நபர்கள் வேலை செய்த போதிலும் கூட ஓம் சக்தி பட்டாசு ஆலையில் 50 நபர்களுக்குத்தான் மாநில வேலை ஈட்டுறதி திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது;

இந்தத் தொழிலில் மாற்றங்கள் கொண்டுவர இந்த அசம்பாவிதம் ஒரு காரணமாக இருக்குமா? "ஓம் சக்தி ஆலையில் வேலை செய்த வேலையாட்களின் அறியாமையை வைத்துப் பார்த்தால் பாதுகாப்பு வழிமுறைகள் தெரியாதவர்களை வைத்து வேலை பார்ப்பது எவ்வளவு துயரமானது என்று ஆலை பாதுகாப்பு நிபுணரான V. ஸ்ரீராம் கூறுகிறார். ஆலைகளில் உள்ள நெருப்பு அணைக்கும் பக்கெட்களில் மணல் இல்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பே தமிழ் நாடு தீயணைப்புத் துறையால் அதிக வாய்ப்புள்ள தீ பிடிக்கும் இடமாக சிவகாசி உள்ளிட்ட விருதுநகர் மாவட்டம் அறிவிக்கப்பட்டபோதும் அந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பான்கள் வெறும் காட்சிப் பொருளேதான் என்பதைத் தவிர அவைகளை வெடி மருந்து தீ விபத்து வரும்போது உபயோகப்படுத்த முடியாது என்று சிவகாசி தீயணைப்பு அதிகாரி ஆர். சண்முகராஜுலு கூறுகிறார்.

சிவகாசியிலுள்ள பொது மருத்துவமனை தீக்காயப் பிரிவு மிகவும் ஆரம்ப கட்ட நிலையிலேயேதான் உள்ளது. நெருப்போடு விளையாடும் இடமான அதிலும் வாரத்தின் ஏழு நாட்களும், நாளின் 24 மணி நேரமும் நெருப்பு அபாயமுள்ள சிவகாசியில் அப்படி இருப்பது மிகவும் அதிர்ச்சி தருகின்றது. இந்த விபத்துக்கு பின்பு ஜெயலலிதா அரசு 4.5 கோடி ரூபாய் ஒதுக்கி இந்தப் பிரிவை மேம்படுத்திட ஆணை பிறப்பித்திருக்கிறது.

1923ம் ஆண்டு தொடங்கிய இந்தப் பட்டாசுத் தொழிலில் பயிற்சி பெற்ற மனித வளம், 1990களில் திருப்பூர் பகுதிகளில் ஆடைத் தொழிற்சாலைகளால் கவர்ந்திழுக்கப்பட்டனர். இதுகாரணமாக விழுந்த பெரிய இடைவெளி தொழில்நுட்ப அறிவோ பயிற்சியோ இல்லாத மக்களால் பக்கத்து மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு நிரப்பப்பட்டன. இத்தொழிலை கவனமாய் கவனித்து வருபவர்கள் சிவகாசியைப் பொறுத்தவரை ‘‘அறியாமைதான் ஆனந்தம்’’ என்கின்றனர்.

வருடத்திற்கு 1500 கோடி ரூபாய் புரளும் இந்தத் தொழிலுக்கு மனிதர்களை பயிற்சியளிக்கும் எந்த நிறுவனமும் இல்லாதது பெருங்குறையாகும். அப்படிப் பயின்றவர்கள் நல்ல பணிச் சூழலை கேட்டுப் பெறுவார்கள். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெண்களை இதற்கு பயிற்றுவிப்பதற்கான முன்மொழிவு, திட்டமிடப்பட்டு அந்த அளவிலேயே நிலுவையில் உள்ளது.

ஸ்ரீகாளீஸ்வரி ஆலை போன்றவற்றில் பணியில் அமர்த்திட ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரியில் 6 மாதப் பயிற்சி ஒன்று நடத்தப்படுகின்றது. பட்டாசுத் தொழில் மற்றும் அதன் பாதுகாப்பு பற்றிய பயிற்சி தம் இடங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்ள என்றே நடத்தப்படுகிறது.

பெட்ரோலியம் மற்றும் வெடிமருந்து பாதுகாப்பு நிறுவனத்தின் (PESO) விரிவுப்பகுதி சிவகாசியில் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து யூனிட்டுகளுக்கும் பொறுப்பாக ஐந்து அலுவலர்களை மட்டும் கொண்டுள்ளது. உலகிலேயே அதிக அளவில் பட்டாசு உற்பத்தியில் சிவகாசி இரண்டாவது இடத்தில் இருந்தாலும் இதுதான் நிலைமை. முதலிடம் சீனாவிலுள்ள லீயு யாங் (Lin yang) பகுதியாகும். இது உள்ளூர் மக்களுக்கு நல்ல வருமானம் ஈட்டும் வாய்ப்புள்ள தொழிலாகும்.

விபத்துக்குப் பிறகு மாநில மத்திய அரசுகள் ஆய்வுகளுக்கு முனைகின்றன. இதில் அதிகாரிகள் அனைவரும் ஆலைகளை மட்டும் பொறுப்பாக்கிட முயற்சிக்கிறார்கள். ஆறு துறைகளைச் சேர்ந்த ஆறு நபர்கள் கொண்ட ஆறு குழுக்கள், எதிர்பாராமல் ஆலைகளுக்கு சென்று பார்வையிட இருக்கிறார்கள். அவர்கள் வெடிமருந்து, காவல், ஆரோக்கியம், தீயணைப்பு, தொழிலாளர் மற்றும் தொழல்துறைகளை சார்ந்த நபர்கள் செப்டம்பர் 25க்குள் 700 ஆலைகளையும் பார்வையிடப் போகிறார்கள்.

இந்த ஆய்வு, வெறும் கண்துடைப்புதான் என்கிறார் எவிடன்ஸ் (Evidence) என்னும் தன்னார்வ நிறுவனத்தின் செயல் இயக்குநரான கதிர் என்பவர், ‘‘எப்படி ஆறு குழுக்கள் மட்டும் 700 ஆலைகளை பதினைந்து நாட்களுக்குள் பார்வையிட்டுவிட முடியும். அதிலும் பல வீடுகளில் அனுமதி இல்லாமல் பட்டாசு வேலை நடக்கிறது. இந்த ஆய்வினால் ஒன்றும் பெரிதாக வந்துவிடப் போவதில்லை என்று எல்லோருக்கும் தெரியும்’’ என்று சொல்கிறார்.

பல ஆண்டுகளாக ஆலை உரிமையாளர்கள் தொழிலாளர்கள் பகுதி வேலையை வீட்டிற்கு எடுத்துச் சென்று செய்வதை ஆதரித்திருந்தனர். அதனால் பல வீடுகளில் சூரியன் மறைந்த பிறகு மூலப்பொருளாக அளிக்கப்படுவது மறுநாள் காலையில் முடிக்கப்பட்ட சரக்குகளாக மாற்றப்படுகிறது. செப்டம்பர் 8 அன்று, மாவட்ட நிர்வாகத்தினர் சிவகாசியில் ஒரு வீட்டில் ரூ. 8 லட்சம் மதிப்புள்ள 90 பட்டாசு பெட்டிகளை கைப்பற்றினர்.

இதுமட்டுமே கவலை கொள்ள வேண்டிய ஒன்று அல்ல. வெடி மருந்துத் துறைக்கும் ஆலைகளுக்கும் உள்ள உறவு பற்றி காவல்துறையில் இருப்பவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே பல வழக்குகளில் விதிமுறை மீறல்கள் கண்டு கொள்ளப்படுவதில்லையாம். இடைக்கால வேலை நிறுத்தி வைப்பு நோட்டீஸ்களுக்கு என்று ஒரு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது அதற்கு தீர்வு கண்டுவிடும். நாக்பூர் மற்றும் சென்னை வெடிமருந்துத் துறையிலிருந்து அதிகாரிகள் இந்த விபத்துபற்றி ஆராய சிவகாசி வந்தபோது அவர்கள் தங்குமிடம்

மற்றும் உணவுச் செலவுகளை ஏற்றுக்கொண்டது. சிவகாசியிலுள்ள அவர்களது உள்ளூர் அலுவலகம் அல்ல, பட்டாசு ஆலைகளின் சங்கம்தான் (TANFAMA)

ரூ.20,000/–க்கான தங்கு விடுதியின் கட்டணச் சீட்டு (bill) TANFAMA பெயரில்தான் இருக்கிறது. 225 ஆலைகள் இதில் பதிவு பெற்றிருக்கின்றன. இன்னும் அந்த பில் கட்டப்படவில்லை என்றுதான். TANFAMA-வினர் சொல்லிக் கொள்கிறார்கள்.

பட்டாசு உற்பத்தியாளர்கள் பட்டாசு விற்பனை அதிகமாக நடக்கும் காலங்களில் அவர்கள்மீது ஊடகங்களின் பார்வை படுவதுபற்றி வருத்தப்பட்டுக் கொள்கிறார்கள். இந்த ஆலைகள் செப்டம்பர் 6 முதல் 9 வரை மூடப்பட்டுள்ளதால் தீபாவளிக்காக வேலை முடுக்கிவிடப்படும்.

“இந்தத் தொழில் செய்வது என்னவோ கள்ளச் சாராயம் காய்ச்சுவது போல் பார்க்கப்படுகிறது” என்று கோபம் கொள்கிறார், இந்திய பட்டாசு ஆலைகள் சங்கத்தின் தலைவர் ஜே. தமிழ் செல்வன். “இந்த ஆய்வுக்காக வரும் அலுவலர்கள் இந்தத் தொழிலையே பெயர் கெடச் செய்துவிடுகிறார்கள். விதிகளை மீறுகின்றவர்களின் உரிமத்தை இரத்து செய்யலாம். அதற்குப் பதிலாக இந்த தொழில் செய்பவர்கள் அனைவரையும் தப்பு செய்பவர்களாக ஏன் பார்க்க வேண்டும்? கல்லூரிகளுக்கு கிரேடு தருவதைப்போல ஆலைகளுக்கும் ஏன் கிரேடு தரக்கூடாது” என்று கேட்கிறார்.

சிவகாசியில் இந்தத் தொழில் எதிர் கொள்ளும் மிகப்பெரிய சவால் தானியங்கி கருவிகளை அறிமுகம் செய்ய முடியாதிருப்பது, மேலும் துறைமுகங்கள் பட்டாசுகளை ஏற்றுமதிக்கு ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால், சீன அரசு இவைகளை எளிதில் விளையாட்டுப் பொருள் எனக்கூறி 30,000 கோடிக்கான உலகச் சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

பட்டாசுத் தொழிலோடு சிவகாசி புத்தகங்கள் வண்ண தெய்வப் படங்கள் உள்ள காலண்டர்கள் போன்றவற்றை அச்சிடும் அச்சுத் தொழிலுக்கும் மையமாக இருக்கிறது. குட்டி ஜப்பான் என்று ஜவஹர்லால் நேருவால் அழைக்கப்பட்ட சிவகாசி இனி புதியதோர் அவதாரம் எடுத்தாக வேண்டும். இந்த திருவிழாக்கள் கொண்டாடும் சமயம் புதிய வெளிச்சத்தில் நல்லபடி புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

### நெருப்பு பிடிக்க வைக்க

**சிவகாசிக்கு அருகிலுள்ள ஒரு பட்டாசு ஆலை எரிந்து போன பின்பு அங்கு சென்று பார்த்தபோது எப்படி பாதுகாப்பு விதிகள் மீறப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்திட முடிந்தது என்று சொல்கிறார் T.S. சுதிர்.**

அந்தக் கறுப்பு புதன்கிழமைக்கு 8 நாட்களுக்கு முன்புதான் பி. ரங்கசாமி, துணைத் தலைமை கட்டுப்பாட்டு அதிகாரி, வெடிமருந்து துறையின் சிவகாசி கிளைக்கு மாற்றப்பட்டார். அவரும் அவர் குழுவினரும் முதலிப்பட்டியில் உள்ள (சிவகாசியிலிருந்து 16 கி.மீ) ஓம்சக்தி பட்டாசு ஆலையை மேற்பார்வையிட சென்றனர். ஆகஸ்ட் 28ம் தேதி அவர்கள் 38 விதிமுறை மீறல்கள் இருப்பதாகக் கண்டுபிடித்தனர். அதில் பல பெரிய பிரச்சனைகள் சில சிறிய பிரச்சனைகள் என இருந்தன. உரிமத்தை ரத்து செய்து விடுவதற்கான எல்லாக் காரணங்களும் அந்த சில மற்றும் பல பிரச்சனைகளில் இருந்தது அவை:

- 160 நபர்கள் வேலை செய்ய வேண்டிய அந்த ஆலையில் 300 நபர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.
- 35 நபர்கள் மரங்களின் அடியில் அமர்ந்து பட்டாசு செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், விதிகளின்படி அதற்கான அறைகளில் மட்டும்தான் செய்ய வேண்டும்.
- இரும்பு பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.
- 35 பணி அறைகளுக்கான கட்டிட அனுமதியே வழங்கப்பட்டிருந்தும் 55 பணி அறைகள் கட்டப்பட்டிருந்தன.

“நீங்க புகைப் பிடிப்பீங்களா” என்று எங்கள் பத்திரிக்கைக் குழு அந்த ஆலையை பார்வையிட சென்றபோது அங்கு இருந்த காவல்துறை உதவி ஆய்வாளர் செல்வராஜ்கேட்டார். விபத்துக்குப்பின் நான்கு நாள் கழித்து போன எங்களை இப்படிக் கேட்டு “நீங்கள் செய்யமாட்டீர்கள் என்று தெரியும் என்றாலும் கேட்க வேண்டியது எங்கள் கடமை” என்று சொல்லி முடித்தார்.

இப்படிப்பட்ட எச்சரிக்கைகள் பின்பற்றப்பட்டிருந்தால் 38 நபர்கள் உயிரிழக்க நேர்ந்திருக்காது. விபத்துக்குப் பின்பு அந்த ஆலையை பார்வையிட்டபோது பாதுகாப்பு விதிகள் எவ்வாறு மீறப்படலாம் என்பதற்கு ஒரு உதாரணமாக, அது இருந்தது. ஆய்வுக் குழுவின் வருகை, உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்வதற்கான முடிவு ஆலை, நிர்வாகத்தினரை ஒன்றும் செய்யாது என்று தெரிந்தது.

- காவலாளியின் அறையில் அலுமினியம் பவுடர் நிறைந்த டிரம்கள் நிறைந்திருந்தன.

- கச்சாப் பொருட்களும் இறுதிப் பொருட்களும் தரை முழுவதும் வெட்ட வெளியில் மரங்களின் அடியில் சிதறி கிடந்தது. இதைத் தான் முன்னர் பார்வையிட்ட வெடி மருந்து துறை குழுவினரும் ஆட்சேபித்திருந்தனர் தீ பிடித்ததும் ஓம் சக்தி ஆலை முழுவதும் பரவ வசதியாய் இருந்தது.

- அதிகமாய் வளர்ந்த புல், தீ வேகமாய்ப் பரவ வசதி செய்து கொடுத்தது.

- அனுமதி வழங்கப்படாத அறைகளில் பட்டாசு நிறைந்திருந்தது. இந்த அறைகளில் இருந்த பட்டாசுகள் வெடித்துச் சிதறியது எந்த தீபாவளியிலும் இல்லாத விதமாய் விபத்துக்குப் பின் பிணங்களும் கை, கால் உடைந்த மனித உடல்களாய் விரவி இருந்தது. இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால் இத்தனை விதிமுறை மீறல்கள் இருந்தும் ஓம் சக்தி பட்டாசு ஆலையின் உரிமம் ரத்து செய்யப்படவில்லை. ஒரு வேளை அதன் உரிமையாளர் அரசியலில் அவ்வளவு செல்வாக்கு உள்ளவரோ ? அப்படியே கதவை இழுத்து மூடி சீல் வைத்துவிட முடியாது. சில வேலைகளை முடித்துதான் மூடிட வேண்டும். இல்லையென்றால் அதுவும் பாதுகாப்பில்லை என்று ரங்கசாமி சொல்கிறார்.

பட்டாசுத் தொழிலில் இருப்பவர்கள் சொல்வது என்னவென்றால் விபத்து நடந்த பின் ஓரிரு மணி நேரங்களில் ஒதுக்க வேண்டியவைகளை, செய்ய வேண்டியவைகளை செய்தபின் காவல்துறைக்கு தெரிவித்து உடனே சீல் வைத்துவிடுவார்கள் என்று. ஆனால், இப்போது ஒரு வாரம் ஆகியும் எதுவும் நடைபெறாதது சந்தேகத்தை எழுப்புகின்றது. இது இயலாத்தனமா அல்லது திறமைக் குறைவா ?

செப்டம்பர் 5ம் தேதி மதியம் 12.10க்கு நெருப்பு பிடித்தபோது வெடிமருந்துத் துறை கட்டுப்பாட்டாளர் முதல் நாளே உரிமம் ரத்து செய்யப்பட்டுவிட்டதென்று கையை கழுவிவிட்டார் ஆனால்:

- உரிமம் ரத்து என்றால் ஏன் சீல் வைக்கப்படவில்லை. மேற்பார்வை முடிந்து ஒரு வாரம் ஆகியும் வேலை தொடர்ந்து நடந்தது எவ்வாறு ?

- ரத்து பற்றி மாவட்ட ஆட்சியருக்கோ காவல்துறை கண்காணிப்பாளருக்கோ எந்த தகவலும் இல்லை. இந்த விபத்து நடந்து 8 மணி நேர இடைவெளிக்கு பின்தான் தொலைநகல் (Fax) செய்யப்பட்டிருக்கிறது. விரைவுத் தபால் (Speed Post) அனுப்பியதாக சொல்லப்பட்டது இன்னும் சேரவேயில்லை.

தீ எரிய ஆரம்பித்ததும் எந்த உயிர் இழப்பும் நடக்கவில்லை. தீ பிடித்த அரை மணி நேரத்துக்கு பின்பு ராக்கெட்டில் செலுத்தப்படும் இராசயன அறையில் வெடி வெடித்ததுதான். இத்தகைய கொடூர மரணங்கள் நிகழக் காரணம். அவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களை துப்பாக்கி குண்டு போல் தாக்கியது, பெருங்காயங்களை உண்டாக்கியது.

50 கிலோ கலர் வெடி மருந்துகளை சேமிக்க ஓம் சக்தி ஆலைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தும் 8 டன் வரை அங்கு சேமிக்கப்பட்டிருந்தது என்று சிலர் சொல்கிறார்கள். இறந்த 38 நபர்களில் 34 நபர்கள் வேடிக்கை பார்க்க வந்தவர்கள் நால்வர்தான் அங்கேயே வேலை பார்த்தவர்கள்.

விருதுநகர் மாவட்ட எஸ்.பி. நஜ்மல் கோடா சொல்கிறார் ‘‘ஒவ்வொரு விதிமுறையும் ஓம் சக்தி ஆலையில் மீறப்பட்டிருக்கிறது. லீசுக்கு விடக் கூடாது, விடப்பட்டிருக்கிறது. ரப்பர் பாய்கள் உபயோகப்பட்டிருக்க வேண்டும், அது இல்லை. இரசாயனக் கலவை தப்பான விகிதத்தில் கலக்கப்பட்டிருக்கிறது. அல்லாமல் அதிக கும்பல், அதிக இரசாயனப் பொருள் சேமிப்பு இவையெல்லாமும் காரணங்கள்தான்’’ என்கிறார்.

தீபாவளிக்கு முந்தைய மாதங்கள் விபத்துக் காலம் என்றழைக்கப்படும். ஏனென்றால், உரிமையாளர்கள் வேலைகளை முடிக்க அவசர அவசரமாய் கிடைத்தவர்களை எல்லாம் வேலைக்கு வைப்பார்கள். வேலை செய்பவர்களுக்கோ, பள்ளியில் இடை நின்ற இவர்களுக்கோ பணம் சம்பாதிக்க இதுதான் நேரம், நாளுக்கு ரூ.300 வரை கூலியாகக் கிடைக்கும்.

ஒவ்வொரு நாளும் இங்கிருந்து பத்திரமாய் வீடு திரும்பும் வேலையாட்களுக்கு வாழ்வில் ஒரு நாள் கூடுதலாகக் கிடைத்ததாய் நினைக்கலாம்.

– ஆதாரம்: **தெஹல்கா, 22 செப்டம்பர் 2012**

# பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்ட விதிகளின் கீழ் முன் ஜாமீன் இல்லை - உச்சநீதிமன்றம்

## இந்திய உச்சநீதிமன்றம்

## குற்ற மேல்முறையீட்டு நீதிமன்றம்

## சிறப்பு விடுதலை மனு (கு.ச) எண். 6432ன் 2012

விலாஸ் பாண்டு ரங்பவார் மற்றும் பிறர் ... மனுதாரர்

எதிர்

மகாராஷ்டிர அரசு & பிறர் ... எதிர் மனுதாரர்

## தீர்ப்பு

நீதியரசர் **P. சதாசிவம்**

1) குறுகியதோர் கேள்வி இந்த மனுவைப் பொறுத்து என்னவென்றால் 1860ல் இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பல்வேறு வகையான குற்றங்களின்கீழ் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரைப் பாதுகாக்கும் சட்டம் 1989ன்படி (சுருக்கமாக எஸ்.சி. எஸ்.டி. சட்டம்) வழக்கொன்று வரும்போது குற்றம் சாட்டப்பட்டவர் முன்ஜாமீன் பெற பிரிவு 438 (இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 1973) கீழ் வழி இருக்கிறதா என்பதுதான்.

2) சவிதா மாதவ் அக்கடேயின் புகார் மனுவில் அதாவது மூன்றாவது எதிர் மனுதாரர், அவரும் அவரது குடும்பத்தாரும் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள அகமது நகர் மாவட்டம், கர்ஜாட் தாலுகாவிலுள்ள கந்தேஷ்வரி என்னும் கிராமத்தில் விவசாய வேலை செய்து பிழைத்து வருகிறார். மேலும் மனுதாரருக்கு விவசாய நிலம் உண்டு. அது பாலுபானுதாஸ் பவார் மற்றும் அருண் பானுதாஸ் பவார் ஆகியோரின் விவசாய நிலங்களுக்கு பக்கத்தில் அமைந்துள்ளது.

15.6.2012ம் தேதியன்று தன்னுடைய விவசாய நிலத்தில் தேங்கி இருந்த மழை நீரை பாலுபானுதாஸ் நிலத்தில் வழிந்தோடவிட்டுவிட்டார். மனுதாரரும் அவர் கணவரும் எஸ்.டி. பஸ் நிறுத்தத்தில் காஜாட் செல்வதற்கு காத்திருந்தனர். அந்த நேரம் பாலு பானுதாஸ் பவார் அங்கே வந்து அவர்கள் ஜாதிப் பெயரை சொல்லி தன்னுடைய நிலத்தில் மழைநீரை வழிந்தோடவிட்டதற்காக கோபமாய் திட்டியபடி இருந்தார். பின் மனுதாரரும் அவரும் வீடு திரும்பிய பின்பு குற்றம் சாட்டப்பட்டிருந்த மற்றவர்களோடு சேர்ந்து வீட்டிற்கு வந்து திட்ட ஆரம்பித்தார்கள். அப்போதும் சாதிப் பெயரை சொல்லி திட்டியதோடு மனுதாரர் மற்றும் குடும்பத்தார்களை கம்பு, கத்தி, கல் போன்றவற்றால் தாக்கவும் செய்தனர். அதன்பின்பு அதே நாளில் மகாராஷ்டிர மாநில அகமது நகர், கர்ஜாட காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டது, பதிவு எண்.139/2012.

3) மனுதாரரும் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிறரும் முன்ஜாமீன் விண்ணப்பித்து குற்றப்பிரிவு எண்.438கீழ் (குற்றவியல் இதர மனு)வின் கீழ் எண் 712, 2012ல் அகமது நகரிலுள்ள செசன்ஸ் நீதிமன்றத்தில் பதிவு செய்தனர். 4.7.2012ம் தேதியிட்ட ஆணையின் கீழ் கூடுதல் செசன்ஸ் நீதிபதி முன்ஜாமீன் கேட்டு விண்ணப்பித்த மனுவை நிராகரித்து ஆணையிட்டார்.

4) செசன்ஸ் நீதிபதியின் ஆணையை எதிர்த்து மனுதாரர்கள் குற்ற மனு ஒன்றை மும்பை உயர்நீதிமன்ற அமர்வு, ஔரங்கா பாத்தில் பதிவு செய்தார்கள். பதிவு எண்.3012, 2012 – தேதி 19.7.2012 ஆனால், முன்ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்தும் ஆணையிடப்பட்டது. எனவே, மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்தில் சிறப்பு விடுவிப்பு கோரி இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 136–ன்படி விண்ணப்பித்துக் கொண்டனர்.

5) திருதிலிப் அன்னாசாகேப் தாவூர். மனுதாரர்கள் சார்பாக ஆஜரானார்.

6) இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து பல வகையான குற்றங்கள் குறித்தும் எஸ்சி.எஸ்டி சட்டத்தின் பிரிவு 3(1)(x)ன்படியும் 18ம் பிரிவின் கீழும் நாங்கள் எப்படி முன்ஜாமீன் கொடுக்க முடியும் என்ற ஓர் கேள்வியை எழுப்பினோம். எஸ்.சி. எஸ்.டி. சட்டத்தின் 18ம் பிரிவை மீண்டுமொரு முறை பார்ப்போம். அதன்படி:

> பட்டிவயல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 18 பிரிவு 438ன்படி குற்றம் செய்வதிலிருந்து விடுப்பு அளிக்க முடியாது.

438வது பிரிவு எஸ்.சி/எஸ்.டி. சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்களுக்குப் பொருந்தாது என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. மனுதாரரும் அவர் குடும்பத்தாரையும் சாதிப் பெயரை சொல்லி அவதூறாக திட்டியதோடு அடிக்கவும் செய்திருக்கிறார்கள்'' <u>மகரை அடியுங்கள். அதனால் கிராமத்தில் வசிக்காமல் போகட்டும்''</u> என்று சொல்லியே அடித்திருக்கிறார்கள்.

7) புகார் அளித்தவர்களின் துயரம் மற்றும் மனுதாரர்களின் கோருதலையும் புரிந்து கொள்ள 15.6.2012ம் தேதியிட்ட மனுவினுடைய சுருக்கத்தை பார்ப்பது உதவியாய் இருக்கும்.

**புகார்**

1. சௌ. சுவீதா மாதவ் அக்கடே, வயது 45 வேலை வீட்டு பணி R/O தகளி. காண்டேஸ்வரி கர்ஜாட் தாலுகா (இந்து மதம் – ஜாதி மகர்)

   என்னுடைய புகார்தனை இந்தக் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக தருகிறேன். மேற்கண்டுள்ள இடத்தில் நான், என் கணவர் மாதவ், என் மகன்கள் ரமேஷ், உமேஷ் இவர்களுடன் வாழ்ந்து வருகிறேன். பீடு (Beed) மாவட்டத்தில் என் கணவர் வேலை பார்த்து வருகிறார். என் வீட்டுக்கு அருகில் தாதா சாகேப் பாராஜி அக்கடே, சதாவிவ் பாராஜி அக்னீட் மற்றும் திலீப் பாராஜி அக்கடே ஆகியோர் வசித்து வருவதோடு விவசாயப் வேலை செய்து வருகிறார்கள். என்னுடைய விவசாய நிலம் கந்தேஸ்வரி கிராமப் பகுதியில் இருக்கிறது. நான் விவசாயம் செய்து வரும் இடத்திற்கு அருகில் பாலு பானுதாஸ் பவார் மற்றும் அருண் பானுதாஸ்பவார் இருவரின் நிலமுள்ளது. அதில் அவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். 15.6.2012ம் தேதியன்று எங்களின் நிலத்தினின்று தேங்கி இருந்த நீரை கீழ் நோக்கி வழிந்தோடச் செய்தோம். இது வழக்கமான ஒன்று.

   இன்று 15.6.2012 7 மணி அளவில் என் கணவரோடு தகளி கந்தேஷ்வரி S.T பஸ் நிலையத்தில் கஜ்ராட் செல்வதற்காக காத்திருந்தோம். அந்த நேரத்தில் பாலு பானுதாஸ் பவார் வந்து என் கணவரை நோக்கி ''மகர் பயலே'' என்று அழைத்து நான் என் நிலத்தில் உன் நிலத்திலிருந்து வரும் தண்ணீரை வழிந்து ஓட விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு அவரை அடிக்க ஆரம்பித்தார். அதன்பிறகு அங்கிருந்த மக்கள் சிவாஜி அன்னா தோம்பே போன்றோர். ஒன்று கூடி சண்டையை விலக்கிவிட்டார்கள். அதன்பின் என் கணவர் வீட்டிற்கு வந்து விட்டார். வீட்டிற்கு வந்த பிறகு TATA ACE என்ற வாகனத்தில் பலர் கும்பலாக வந்தனர். அதில் விலாஸ் பாண்டுரங்க பவார், ரவி தாதா பவார், அருண் பானுதாஸ் பவார், ஸ்ரீரங்க பவார், தீபக் பகடே பரமேஸ்வர் இந்திரஜித் பட்டோர், சுதிர் சாகன் பட்டேர் சதீஷ் நாம் கீர்தாட், ரகுநாத் துக்காராம் சாவான்ட், விட்டல் ரகுநாத் சாவான்ட், சந்தீப் ரகுநாத் சாவான்ட், அபா காகா பட்டேர், தாத்ரேய் நாம்டேவ் பவார், பாலு பவாரின் மருமகன் உள்ளிட்டோர் இருந்தனர். இவர்கள் அனைவரும் தகளி கந்தேஷ்வரி கிராமத்தில் வசிப்பவர்கள். இந்த கும்பல் எங்கள் வீட்டின் முன்னாள் நின்று <u>''இந்த மகர்–ஐ அடியுங்கள் அதனால், அவர்கள் இந்த கிராமத்தில் வசிக்காமல் போகட்டும்</u> என்று ஆக்ரோசத்துடன் கத்திக் கொண்டே கம்பு, கத்தி, கல் போன்றவைகளால் தாக்கினார். அந்த சண்டையில் நான், தாதா பாராஜி அக்கடே, சதாசிவ் பாராஜி அக்கடே, குண்டுலிக் தெய்க்வாட் ரமேஷ் அக்கடே, உமேஷ் அக்கடே, ராகுல் அக்கடே, அஸ்ரு

அக்கடே, திலீப் அக்கடே ஆகியோர் தாக்குதலுக்கு உள்ளானோம். மேலும் என்னையும் திலீப் அக்கடே, சாபூபாய் தாதா சாகேப் அக்கர் ஆகியோரை குறிவைத்து தாக்கினார். அதன் பின்பு விலாஸ் பாண்டு ரங்கபவார், ரகுநாத் துக்காராம் சாவண்ட்–ஐ உதவிக்கு அழைத்தார். அதன்பின்பு நாங்கள் காவல் துறைக்கு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து உதவி கோரினோம். அவர்கள் அங்கு வந்த பின்புதான் இந்த வன்முறை முடிவுக்கு வந்தது.

அதன்பின் 15.6.2012 அன்று காலை 7 முதல் 7.30 மணி அளவில் தகழி தாலுக்கா கந்தேஷ்வரி கிராமத்தைச் சேர்ந்த கீழ்கண்ட நபர்கள் வந்தார்கள். அவர்கள் பாலு பானுதாஸ் பவார், விலாஸ் பாண்டு ரங்க பவார், ரவி தாதா பவார், அருண் பானுதாஸ் பவார், ஸ்ரீரங்க பவார், தீபக் பட்டோ பரமேஸ்வர் இந்திர ஜித் பட்டேர், சுதிர் சாகான் பட்டேர், சதீஷ் காம்டே கீர் தத், ரகுநாத் துக்காராம் சாவன்ட், விட்டல் ரகுநாத், சாவன்ட், சந்தீப் ரகுநாத், அபா காகா பட்டேர், தாத்ரேய நாம்தேவ் பவார், பாலு பவாரின் மருமகன் (பெயர் தெரியவில்லை) போன்றோர் சட்டத்துக்கு விரோதமாக கூடி புகார் மனு அளித்த நபரையும் அவருடைய உறவினர்களையும் கத்தி, கம்புகள், அரிவாள் போன்ற ஆயுதங்களை வைத்து தாக்கியதோடு "இந்த மகர் சாதியானை அடித்து நொறுக்குங்கள். அதன் காரணமாக இந்த கிராமத்தைவிட்டு ஓடிப் போகட்டும்'' என்று சொல்லி பாலு பானுதாஸ் பவார். நிலத்தில் ஓடிய மழை நீர் அவர்களின் நிலத்தில் வழிந்தோட காரணமாகிவிட்டோம் என்பதற்காக நானும் மற்றவர்களும் தாக்குதலுக்குள்ளானோம். பலத்த காயமுற்றதால் மருத்துவ சிகிச்சைக்கு செல்ல விரும்புகிறோம்.

இந்த புகாரில் சொல்லப்பட்டதெல்லாம் உண்மை, என்னுடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் எழுதப்பட்டு என் முன்னால் வாசித்துக் காட்டப்பட்டது.

எழுதப்பட்ட

காவல் நிலைய அதிகாரியின் முன்னிலையில் கையெழுத்து இடப்பட்டது.
கார்ஜட் காவல் நிலையம்

தேதி 15.6.2012

அனுப்பப்பட்டது: மாண்புமிகு JMFC
கார்ஜட்

ஒப்பம்
காவல் நிலைய அதிகாரி
கர்ஜாட் காவல் நிலையம்

புகார்–ஐ ஆழ்ந்து நோக்கினால் மனு அளித்தவர்கள் மற்றும் இதர குற்றம்சாட்டப்பட்டவர்கள் சாதி பெயரை சொல்லியதோடு மழை நீரை நிலத்தில் விட்டதற்காக அடித்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

8) எஸ்சி / எஸ்டி சட்டத்தின் 18ம் பிரிவு 438–வது சட்ட விதியின்கீழ் செயல்படுவதை தடை செய்கிறது. எஸ்சி / எஸ்டி சட்டத்தின்படி அவர்கள் குற்றம் செய்திருப்பது உறுதியானால் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு முன்ஜாமீன் பெற உரிமை இல்லை.

9) 438 விதியின் கீழ் 18ம் பிரிவு முன்ஜாமீன் பெறுவதை தடை செய்கிறது. ஒரு குற்றமானது எஸ்சி / எஸ்டி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும்போது எந்த நீதிமன்றமும் முன்ஜாமீன் வழங்க அதிகாரமில்லை. மேலும் முன்ஜாமீனுக்கான மனுவை பரிசீலிக்கும்போது சில விசயங்கள் கவனிக்கப்படல் வேண்டும். நீதிமன்றம் சாட்சியங்களை பகுத்தாய்வு செய்ய வேண்டிய அவசியமில்லை. எஸ்.சி. எஸ்.டி சட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க முயற்சிக்கும்போது அதனை மீறுபவர்களுக்கு முன்ஜாமீன் இல்லை என்பது பற்றி பெரிய விவாதமோ சாட்சிகள் பற்றி விலாவாரியான விவாதமோ செய்வது சிறப்புச் சட்டம் ஆகாது.

10) டெல்லி உயர்நீதிமன்றத்தில் Dr.R.K.சங்வான் மற்றும் சார் எதிர் மாநிலம் 2009, (112) DRJ.473 (DB) மற்றும் குற்ற M.C. எண். 3866 / 2008 மற்றும் குற்ற M.C. எண். 1222/2009 தலைப்பு M.A. ரஷ்து எதிர் கோபால் சந்திரா 23.3.2012 மற்றும் ஒரு தீர்ப்பு ஒரிசா நீதிமன்றம் ரமேஷ் பிரசாத் பாஞ்சா மற்றும் Ors. எதிர் ஒரிசா மாநிலம் 1996 குற்ற

L.J. 2743, சிறப்பு தடுப்பு பிரிவு, 438ன் கீழ் வழங்கப்பட்டிருந்தாலும் எஸ்சி / எஸ்டி சட்டத்தின் பிரிவு 3(1)ன் கீழ் முன் ஜாமீன் வழங்கப்பட்டிருப்பதாக கூறுகின்றன.

11) எஸ்சி / எஸ்டி சட்டத்தின்கீழ் பிரிவு 18ன்படி மேற்சொன்ன வாதங்கள் என்னவென்றால் பிறரை முன் மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால், மனுவின் தன்மையை பொறுத்துதான் எடுத்துக் கொள்ள முடியும் என்பதுதான்.

12) எனவே, மேலேகண்ட விவாதங்களின் அடிப்படையிலும் எதிர்வாதியான மனுதாரர் மூன்றாம் நபர் எஸ்.சி/எஸ்டி சட்டத்தின் 18ம் பிரிவின் கீழ் முன்ஜாமீன் பெறுவதற்கு உரிமை இல்லை. அதாவது பிரிவு 438ம் (குற்றவியல் சட்டம்) கீழ் எனவே தனிப்பட்ட முறையில் கேட்கப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இருந்தபோதிலும் இந்த மனுவைப் பொறுத்த வரையில் மட்டும்தான் முன்ஜாமீன் பொருந்தும் என்றும் இந்த வழக்கை விசாரணை நீதிமன்றம் தகுதியான அடிப்படையில் தீர்ப்பு வழங்கலாம் என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது.

............................................................ J.
**(P. சுதாசிவம்)**

............................................................ J.
**(ரஞ்சன் கோகோய்)**

புதுதில்லி
செப்டம்பர் 10, 2012

## கணினி மயம்: இணைய தளம் மூலம் சிறைகள் இணைப்பு

மத்திய சிறைகளை தொடர்ந்து, மாவட்ட சிறை மற்றும் கிளை சிறைகளும், கணினி மயமாக்கும் பணி, நடந்து வருகிறது. தமிழகத்தில், சென்னை புழல், 1, 2 மற்றும் 3 உள்ளிட்ட, ஒன்பது மத்திய சிறைகள், 12 மாவட்ட சிறைகள், 12 பாஸ்டன் சிறைகள், 89 தாலுகா கிளை சிறைகள் மற்றும் இரண்டு திறந்த வெளி சிறைச்சாலைகள் உள்ளன.

மத்திய சிறையில், தண்டனை கைதிகளையும், மாவட்ட மற்றும் தாலுகா கிளை சிறைகளில், விசாரணை கைதிகளையும் அடைக்கும் வழக்கம் உள்ளது. தமிழக சிறைத்துறை, ஏ.டி.ஜி.பி., யாக டோக்ரா இருந்த போது, போலீஸ் துறையை போல, சிறைத்துறையை, கணினி மயமாக்க உத்தரவிட்டார்.

முதற்கட்டமாக, தமிழகத்திலுள்ள, ஒன்பது மத்திய சிறைகள், கணினி மயமாக்கப்பட்டன. இதையடுத்து, சிறைக்கு வரும் தண்டனை, விசாரணை கைதிகளின் பெயர், வயது, முகவரி உள்ளிட்ட விவரம், கைரேகையை ஸ்கேன் செய்து, கணினியில் பதிவு செய்தனர்.

மாநிலத்தில், எங்கு குற்றச் செயலில் ஈடுபட்டு, கைதாகி சிறைக்கு சென்றாலும், கைரேகையை ஸ்கேன் செய்யும்போது, அவரது பழைய வழக்குகள், உண்மை விவரங்கள் எளிதாக தெரியக்கூடும். இதனால், மத்திய சிறைகளை தொடர்ந்து, விசாரணை கைதிகள் அடைக்கப்படும், மாவட்ட மற்றும் கிளை சிறைகளிலும், கணினி மயமாக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

**சிறைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:**

முன்னாள் சிறைத்துறை அதிகாரி உத்தரவு படி, மாவட்ட மற்றும் கிளை சிறைகள் கணினி மயமாகின்றன.மாநிலத்திலுள்ள, 113 சிறைகளுக்கு, புதிதாக கம்ப்யூட்டர், பிரின்டர், யு.பி.எஸ்.,ஆகியவற்றை, சென்னையை சேர்ந்த, சிக்மா பவர் கண்ட்ரோல் மற்றும் டில்லியைச் சேர்ந்த லேண்ட் மார்க் இன்போ நெட் பி., லிமிடெட் ஆகிய இடங்களில் இருந்த அனுப்பியுள்ளனர். சிறைகளிலுள்ள, பி.எஸ்என்.எல்., மோடம் மூலமாக, இணைய தள வசதியை ஏற்படுத்தி, சிறைக் காவலர்களுக்கு பயிற்சி வழங்கி, சிறை வருகை பதிவேடு முதல், கைதிகள் பற்றிய விவரம் வரையில், கணினியில் பதிவு செய்யப்படும். மத்திய சிறை சர்வருடன், மாவட்ட மற்றும் கிளை சிறைகள் இணைக்கப்படும். 15 நாட்களில், இப்பணிகளை முடிக்க உத்தரவிட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ஆதாரம்: தினமலர், 7.11.2012**

# தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் குறித்த சுயேச்சையான மக்கள் தீர்ப்பாயம்

## பயனுள்ள வகையில் நீதி கிடைக்கச் செய்வதை நோக்கி மனித உரிமை அமைப்புகளை ஊக்குவித்தல்

### 15, செப்டம்பர், 2012, இக்சா, சென்னை

மனித உரிமை சட்ட இணையம் (HRLN), தேசிய மற்றும் மாநில மனித உரிமை அமைப்புகளோடு இணைந்து பணிபுரியும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனி நபர்கள் ஆகியோரின் அனைத்திந்திய கூட்டமைப்பு(AiNNI), மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF), இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்ச்சி மையம் (SASY) மற்றும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி சொசைட்டி (SIRD) ஆகிய அமைப்புகளின் ஆதரவோடு **பயனுள்ள வகையில் நீதி கிடைக்கச் செய்வதை நோக்கி மனித உரிமை அமைப்புகளை ஊக்குவிக்க தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் குறித்த சுயேச்சையான மக்கள் தீர்ப்பாயம்** ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சி **சனிக்கிழமை, 15 செப்டம்பர் 2012 அன்று சென்னையில் நடைபெற்றது. மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சிறப்பாக, வெளிப்படைத் தன்மையோடு, பொறுப்பாக செயல்படும் வகையில் தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தை வலுப்படுத்துவதே இந்த தீர்ப்பாயத்தின் முக்கிய நோக்கம்.**

இந்தத் தீர்ப்பாயம் 50 வழக்குகளைக் கேட்டது இந்த வழக்குகளை பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் விவரித்தார்கள் தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம், பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகார்களை எவ்வாறு விசாரித்து மற்றும் விசாரிக்கவில்லை என்பதை பற்றியும் அதனால் சந்தித்த கஷ்டங்களையும் விவரித்தார்கள். இந்தத் தீர்ப்பாயத்தில் சித்தரவதை, காவல் நிலைய மரணங்கள், காவல் நிலைய பாலியல் வன்புணர்ச்சிகள், மோதல் கொலைகள், சாதிய பாகுபாடு மற்றும் தீண்டாமை, கல்வி உரிமை சட்டத்தை மீறுதல் உள்ளிட்ட பல வழக்குகள் விவாதிக்கப்பட்டன.

அனைத்து புகர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலத்தை கூர்ந்து கவனித்த நடுவர் குழுவின் சில முக்கிய கருத்துக்கள்:

1. மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993ன் பிரிவு 12ல் குறிப்பிடப்பட்டுள்ள, ஆணையம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் பலவற்றை தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் நிறைவேற்றவில்லை.
2. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மனித உரிமை மீறல் குறித்த வழக்குகளில் கடந்த 15 ஆண்டுகளாக ஒரு முறை கூட மாநில மனித உரிமை ஆணையம் தலையிட்டதில்லை
3. மாநில மனித உரிமை ஆணையம், மனித உரிமைகளைப் பாதுகாக்க, எந்த ஒரு சட்டம் அல்லது இந்திய அரசியல் சாசனச் சட்டம் வழங்கியுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளைப் மறுஆய்வு செய்ததில்லை. அவற்றை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கவில்லை.
   - மனித உரிமை ஆணையம், மனித உரிமைகளைப் அனுபவிப்பதற்குத் தடையாக உள்ள தீவிராத நடவடிக்கைகள் உள்ளிட்ட எந்தக் காரணகளையும் மறுஆய்வு செய்யவில்லை. இது போன்ற பிரச்சனைகளை சரிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை பரிந்துரைக்கவில்லை.
   - மனித உரிமை சார்ந்த துறையில் எந்த ஒரு ஆய்வையும் மேற்கொள்ளவில்லை, ஊக்கப்படுத்தவில்லை
   - மனித உரிமை சார்ந்த களத்தில் பணிபுரியும் அரசுசார அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் முயற்சிகளை ஊக்கப்படுத்தவில்லை.

2. மாநில மனித உரிமை ஆணையம், அதன் செயல்பாடுகளை போதுமான அளவிற்கு செயல்படுத்தவில்லை, அவை

- சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரம் எவ்வாறு உள்ளது என்பது பற்றிய ஆய்வை மேற்கொண்டு தேவையான பரிந்துரைகளை வழங்க மாநில

அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எந்த ஒரு சிறை அல்லது வேறு எந்த ஒரு நிறுவனத்திற்கும் செல்லவில்லை.

- சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு மனித உரிமை குறித்த கருத்துக்களை தெரியப்படுத்த வில்லை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான (இருக்கும்) நடவடிக்கைகளைப்பற்றிய விழிப்புணர்வை புத்தகங்கள், ஊடகம், கூட்டங்கள் மற்றும் பிற வழிமுறைகள் மூலமாக பொது மக்களுக்கு அளிக்கவில்லை.

3. ஆணையர்கள் மற்றும் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் அந்தப் பதவிகளுக்கான காலியிடங்கள் பற்றி நடுவர் குழுவிற்கு கீழ்கண்ட தகவல்கள் சொல்லப்பட்டன.

- ஆணையத்தின் உறுப்பினர்களின் சராசரி வயது 62 ஆகும்
- உறுப்பினர்களின் நியமனத்தில் 3 வகைகள் உள்ளது 1 (உயர்நீதிமன்ற நீதிபதி) + 1 (மாவட்ட நீதிபதி) + 2 (மனித உரிமை பற்றிய புரிதல்/நேரடி அனுபவம் உள்ளவர்கள்). மனித உரிமை பற்றிய புரிதல்/நேரடி அனுபவம் உள்ளவர்கள் என்ற பிரிவின்கீழ் ஓய்வு பெற்ற IAS அதிகாரிகள், மாவட்ட நீதிபதிகள் அல்லது மருத்துவக் கல்வி இயக்குனரகத்தின் ஓய்வு பெற்ற இயக்குனர் (DME) அல்லது ஓய்வு பெற்ற பள்ளிக் கல்வி இயக்குனர் ஆகியோர்தான் இருப்பார்கள். மாநில மனித உரிமை ஆணையத்தின் 15 ஆண்டுகால செயல்பாட்டில் குடிமைச் சமூகம், ஊடகம், கல்வியாளர்கள், சட்டத் துறையினர், பெண் உரிமை செயல்பாட்டாளர்கள், தலித், குழந்தை, பழங்குடியின, சுற்றுச்சூழல் செயல்–பாட்டாளர்களோ அல்லது வேறுயாருமோ உறுப்பினராக நியமிக்கப்பட–வில்லை. எனவே ஆணையத்தின் பன்முகத் தன்மை, செயல்பாடு ஆகியவை கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.
- 7.9.2001 முதல் 21.11.2008 (16 மாதங்கள்) ஆணையத்தின் தலைவர் பதவியில் இருந்து செயல்படயாரும் இல்லை.
- 5.8.2006 அன்று ஆணையத்திற்கு புதிய ஆணையர் நியமிக்கப்படும்வரை 21.11.2003 அன்று பொறுப்பு ஆணையர் ஒருவர் நியமிக்கப்பட்டார்
- 7.9.2001 முல் 5.08.2006 வரை, 5 ஆண்டுகள், 59 மாதங்கள் ஆணையர் பதவி காலியாக இருந்தது.
- 2002 2006 வரை (4 ஆண்டுகள்) ஒரே ஒரு உறுப்பினர்தான் இருந்தார்.
- 14.12.2000 முதல் 30.03.2001 வரை நான்கு உறுப்பினர்கள் தான் இருந்தனர்
- 6.6.2008 முதல் 4.08.2011 வரை (38 மாதங்கள்) மூன்று உறுப்பினர்கள் தான் இருந்தனர்
- 5.08.2011 முதல் 8.1.2012 வரை (5 மாதங்கள்) ஆணையரோ பொறுப்பு ஆணையரோ இல்லை
- 9.1.2012 முதல் இன்று வரை (8 மாதங்கள்) பொறுப்பு ஆணையர் தான் உள்ளார்
- 2011 செப்டம்பர் மாதம் ஆணையரோ, பொறுப்பு ஆணையரோ உறுப்பினரோ இல்லை
- 9.1.2012 முதல் இன்று வரை (8 மாதங்கள் ) ஒரே ஒரு உறுப்பினர் தன் இருக்கிறார்

4. நடுவர் குழுவிற்கு அளித்த தானாகவே முன்வந்து எடுத்த புகார்களை ஆணையம் கையாண்டவிதம் குறித்த வழக்குகளில், தகவல் உரிமை சட்டத்தில் பெற்ற தகவலின்படி, 2006 லிருந்து இன்று வரை 124 வழக்குகளில்தான் ஆணையம் தானாகவே முன்வந்து புகார்களை எடுத்துள்ளது. அதில் 5 வழக்குகள் நீதிமன்றக் காவல் மரணங்கள் 1 மோதல் கொலை, இந்த வழக்குகளில் 49% முடிக்கப்பட்டது, 8% வழக்குகளில் மட்டுமே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது, 3% வழக்குகளில் மட்டும் நஷ்டஈடு அளிக்கப்பட்டது மேலும், 2006லிருந்து இன்று வரை 6 ஆண்டுகளாக 2 வழக்குகள் நிலுவையில் உள்ளது; 2007 லிருந்து இன்று வரை 5 ஆண்டுகளாக 5 வழக்குகள் நிலுவையில் உள்ளது, 18 வழக்குகள் 2008லிருந்து 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது; 2009லிருந்து 3 ஆண்டுகளாக 15 வழக்குகள் நிலுவையில் உள்ளது, 2010லிருந்து 2 ஆண்டுகளாக 2 வழக்குகளும் 2011லிருந்து 2 வழக்குகளும் நிலுவையில் உள்ளது.

5. முறையாக அல்லாமல் அவ்வப்போது வரும் வழக்குகள் பற்றி தகவல் உரிமைச்சட்டத்தில் பெற்ற தகவலின்படி தீவிர கண்காணிப்பிற்காக எடுத்துக் கொண்ட 445 வழக்குகளில் 61% சதவீத வழக்குகள் பற்றிய புகார்களே காவல்துறை ஆணையர் மற்றும் மாவட்ட நிர்வாக அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டது. ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்தில் அனைத்து வழக்குகளும் முடிக்கப்பட்டது. 7% வழக்குகள் சம்பத்தப்பட்ட துறையினரின் அறிக்கைக்கு ஏற்ப முடிக்கப்பட்டன. 14 சதவீதம் புகார்கள் மாநில

மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்பப்படவே இல்லை, 12 சதவீதம் புகார்கள் ஆணையத்தின் எல்லைக்குள் வராததால், கோப்புக்கு அனுப்புப்பட்டு வரிசை எண் அளிக்கப்பட்டு பின்னர் ஆணையத்தின் உறுப்பினர் ஒருவரால் முடிக்கப்பட்டது.

6. 15 ஆண்டு காலத்திற்கும் பிறகும், மாநில மனித உரிமை ஆணையத்திற்கு என்று ஒரு விளக்கக் குறிப்பு கூட இல்லை. ஆண்டறிக்கைகளின் தொகுப்பு மட்டும் உள்ளது. அதுவும் பொது மக்கள் பார்வைக்கு ஆணையத்தின் இணைய தளத்தில் இடம் பெற வில்லை. தமிழ்நாட்டில் ஆண்டறிக்கைகள் தமிழில் இல்லை, ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது அதுவும் உள்ளடகத்தில் மிகவும் தரம் குறைந்ததாக உள்ளது. பல வருடங்களாக சில அத்தியாயங்கள் அப்படியே வார்த்தை பிசகாமல் வருகிறது.

7. ஆணையத்தின் இணையதளத்தின் முதல் பக்கத்தில் பழைய கட்டிடத்தின் புகைப்படமே உள்ளது. தற்போதுள்ள புதிய கட்டிடம் இல்லை.

8. காவல் நிலைய மரணங்கள், அத்தகைய மரணங்களின் பிரேதப் பரிசோதனை, போலீஸ் விசாரணையின் போது நடந்த சாவுகள், மோதல் கொலைகள், பாலிகிராப் சோதனைகளுக்கான வழிகாட்டுதல்கள், சிறைச்சாலைகளில் மனித உரிமைகள், சிறைச்சாலைகளில் மரணம் நடந்தால் அத்தகைய வழக்குகளின் பிரேதப் பரிசோதனையை வீடியோ எடுப்பது, கையில் மலம் அள்ளுவதை நிறுத்துதல் ஆகியவை தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் சில வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது, ஆனால், தமிழ்நாட்டில் இவற்றை கண்காணிக்க எந்த ஒரு முயற்சியையும் மாநில மனித உரிமை ஆணையம் மேற்கொள்ளவில்லை.

9. மாநில ஆணையத்தில் புகார் அளித்த பிறகு, விசாரணைக்காக, பாதிக்கப்பட்டவர்கள் சென்னை அல்லது வேறு இடத்திற்கோ பல முறை வரவேண்டியுள்ளது. சில நேரம் 3–4 ஆண்டுகள் கூட அவ்வாறு வரவேண்டியுள்ளது. இதில் சலிப்படைந்து பலர் ஆணையத்திற்கு வெளியே சம்பந்தப்பட்டவர்களோடு சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

10. மாநில ஆணையத்தில் அனைத்து அலுவலர்களுமே அரசாங்கப் பணியில் இருந்து சில காலம் பணி செய்ய ஆணையத்திற்கு அனுப்படுகின்றனர். மேலும் இதுவரை ஆணையராகவோ உறுப்பினராகவோ இருந்தவர்கள் அனைவரும் நீதிபதிகளாகவோ, முன்னாள் IAS அதிகாரிகளாகவோ பணிபுரிந்தவர்கள். எனவே அனைவரும் அரசாங்கத்திற்காக நாம் வேலை செய்கிறோம், மனித உரிமைக்காக வேலை செய்தால் அது அரசாங்கத்திற்கு எதிரானது என்று கருதுகிறார்கள்.

தேசிய மனித உரிமை அமைப்புகள் முழுவதும் சுதந்திரமாகவும், தொடர்புடைதாகவும் பல வகையான பிரிவினரோடு இணைந்து செயல்படுவதாகவும் இருக்க வேண்டும் என்று பாரிஸ் கொள்கைகள் வலியுறுத்துகிறது. மனித உரிமைகளை பாதுகாக்க முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றால் அனைத்து மாநில மனித உரிமை ஆணையங்களும் பாரிஸ் கொள்கைகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நடுவர் குழு விரும்புகிறது.

தமிழ்நாடு மனித உரிமை ஆணையம் ஒட்டுமொத்தமாக சுதந்திரம் இல்லாமல் செயல்படுகிறது. அது தோற்றுவிக்கப்பட்டதிலிருந்தே தமிழக அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் தன்னிச்சையாக செயல்படுவதில் ஆணையத்திற்கு சிக்கல்கள் உள்ளன. இதனால் ஆணையம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை.

மேலும், நிதியைப் பொறுத்த அளவில் ஆணையம் முழுவதுமாக தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆணையத்திற்கு பொறுப்பாக உள்ள உள்துறை அமைச்சகம்தான் காவல் மற்றும் பிறசட்டம் ஒழுங்கு அலுவலர்களுக்கும் பொறுப்பாகும், இது ஆணையத்தின் சுதத்திரத்தை பலவீணப்படுத்துகிறது.

**மாநில மனித உரிமை ஆணையம், மனித உரிமைகளை பாதுகாக்க மற்றும் மேம்படுத்த, தான் மாநில அளவிலான தலைமை நிறவனம் என்பதற்கேற்றவாறு அல்லாமல், ஓய்வு பெற்ற நீதித்துறை மற்றும் அரசு அதிகாரிகளின் கௌரவத்திற்கான இடமாக உள்ளது. ஆணையத்தின் உறுப்பினர்களின் நிலை / பதவி மனித உரிமைகளைக் காப்பதற்கான போராட்டத்தில் ஒரு சக்திமிக்க ஆயுதமாக இருந்தாலும், உறுப்பினர்களின் நியமனத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை. இதனால், மாநிலத்தில் அதிக திறமையான சிறந்த நபர்கள் வெளிப்படையாக தேர்வு செய்யப்படுவதில்லை. இதனால், மனித உரிமைக் களத்தில் சிறப்பான தலைமைத் துவத்திற்கு தேவையான கூடுதல்**

**திறன்களோடு கூடிய நபர்கள் ஆணையத்தின் உறுப்பினர்களாக முடிவதில்லை.**

**மனித உரிமைக் களத்தில் அனுபவம் பெற்ற பொருத்தமான செயல்பாட்டாளர்களை உறுப்பினர் பதவிக்கு தேர்வு செய்ய மறுப்பதிலிருந்து ஆணையம், உறுப்பினர் பதவிக்கு தேவைப்படும் தகுதிகளோடு கூடிய தலைவர்களை நியமிக்காதது புரிந்து கொள்ளப்படுகிறது. அதனால், விளைவு என்னவென்றால், பெண்களின் நுட்பமான பிரச்சனைகளோடு கூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட புகார்களைப் பரிசீலிக்க 15 ஆண்டுகளில் 9 ஆண்டுகள் ஒரு பெண் உறுப்பினர் கூட இல்லை.**

ஆணையம். தனது செயல்பாடுகளை பெரும்பாலும் சென்னையில் உள்ள ஒரு கட்டிடத்திலேயே மேற்கொள்கிறது. மேலும் ஆணைய உறுப்பினர்களுக்கு எந்த ஒரு பயிற்சியும் அளிக்கப்படுவதில்லை. ஒட்டுமொத்தமாக, மாநில மனித உரிமை ஆணையம் தனது செயல்பாட்டினால் அரசாங்கத்தின் ரகசிய அமைப்புபோல செயல்படுகிறது.

**ஆணையத்தின் பணியாளர்கள், சிறிய அளவில், அரசாங்க வேலையிலிருப்பவர்கள், தற்காலிகமாக அதேபோன்ற பதவியிருப்பவர்கள் ஆகியோரைக் கொண்டு தேர்வு செய்யப்படுகிறது. அவர்களுக்கு அவர்கள் வேலைக்கான பயிற்சியும் அளிக்கப்படுவதில்லை. மேலும் அவர்களுக்கு, மனித உரிமைகள் பற்றிய எந்த ஒரு பின்புலமும் இல்லை. தேசிய மனித உரிமை ஆணையத்தின் சிறப்புத் தூதுவர்கள் பதவி உள்ளிட்ட முக்கியப் பதவிகளுக்கு தகுதியான மற்றும் தகுதியற்ற நபர்கள், முறையற்ற வகையில் தேர்வு செய்யப்படுகின்றனர்.**

**பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து மாநிலம் முழுவதிலிருந்தும் பெறப்படும் புகார்களைக் கையாள மாநில மனித உரிமை ஆணையத்தில் 5 உறுப்பினர்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர். ஆணையத்தில், பதவிகள் தொடர்ந்து காலியாக இருப்பது, தற்போது பொறுப்பு ஆணையர் மற்றும் ஒரே ஒரு உறுப்பினரோடு செயல்படுவது ஆகியவற்றால் புகார்கள் கையாளப்படுவதில் எவ்வளவு சிக்கல் இருக்கும் என்பது ஆச்சரியமல்ல. ஆணையம் வழங்கிய சில ஆணைகளைப் பற்றி படிக்கும்போது, நீதித்துறை அனுபவமுள்ள உறுப்பினர்கள் ஆணையத்தில் இருக்கின்றனர் என்பதை நம்புவது கடினமாக உள்ளது.**

**தேசிய மனித உரிமை ஆணையம் பல்வேறு தலைப்புகளில் வெவ்வேறு பொருள் சார்ந்த குழுக்களை உருவாக்கியுள்ளது போன்று உருவாக்க, மாநில மனித உரிமை ஆணையம் எந்தக் குழுக்களையும் தொடர்பு கொள்வதில்லை. அதாவது மாநிலத்தில் உள்ள பிற நிறவனங்களான பல்கலைக் கழகங்கள் / பள்ளிகள், இளைஞர் அமைப்புகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைப்புகள் போன்றவற்றோடு மனித உரிமை ஆணையம் தொடர்பு கொள்வதில்லை. எனவே, மனித உரிமை ஆணையம் பெறும்பாலும் அரசாங்கத்தில் ரகசியமாக செயல்படும் அமைப்பு போல தனித்து செயல்படுகிறது.**

நீதிபதி **மலாய் சென் குப்தா**
சிக்கிம் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் பொறுப்பு தலைமை நீதிபதி

நீதிபதி **K.P. சிவசுப்பிரமணியம்**
முன்னாள் நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்

Dr. **P. மனோரமா**
முன்னாள் ஆணையர், குழந்தை நல குழு, தலைவர் CHES

முனைவர் **N. மார்கண்டேயன்**
முன்னாள் துணை வேந்தர், காந்திகிராம் பல்கலைக் கழகம்

Dr. **பல்ராம்**
முன்னாள் உறுப்பினர், கேரள மாநில மனித உரிமை ஆணையம்

வழக்கறிஞர் **சுதா ராமலிங்கம்**
தேசிய துணைத் தலைவர், PUCL

வழக்கறிஞர் **S. மார்டின்**

*Organised by*

**HUMAN RIGHTS LAW NETWORK (HRLN)**
**All INDIA NETWORK OF NGO'S AND INDIVIDUAL WORKING WITH NATIONAL AND STATE HUMAN RIGHTS INSTITUTIONS (AINNI)**
**HUMAN RIGHTS ADVOCACY AND RESEARCH FOUNDATION (HRF)**
**SOCIAL AWARENESS SOCIETY FOR YOUTH (SASY)**
**SOCIETY FOR INTEGRATED RURAL DEVELOPMENT (SIRD)**

# பார்வைக்கு புலப்படாத மரணங்கள்

**ரேவதி லவுல் மற்றும் அனில்மிஸ்ரா எழுதுகிறார்கள்.**

**நோயும் மரணமும் :**

அந்தோணி குசூர் இறந்தபோது அவருக்கு வயது 24 தான். ஆகஸ்ட் 24ம் தேதியன்று அவர் சாவுக்குக் காரணமான நோய்பற்றி எவ்வாறு மருத்துவர்கள் கண்டறியவே இல்லை என்று தேம்பிக் கொண்டிருந்த அவர் தாய் திலோபாய் அழுகையுனூடே சொல்கிறார். அவருடைய குடும்பத்தினருக்கு அவரின் இழப்பு மிக மிகப் பெரியது. ஆனால் சட்டீஸ்கர் அரசுக்கோ அது கணக்குக் கூட வராத ஒன்று. அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்புப்படி 2012ம் வருடம் மலேரியாவால் இறந்தவர்கள் என்று எவருமில்லை. அந்தோணிகுசூர் மெல்ல மரணத்திற்குள் வீழ்ந்து மடிந்து போனார். சட்டீஸ்கரில் நடந்த கண்ணுக்குத் தெரியாத மரணங்களில் இவருடையதும் ஒன்று.

குசூர், வடக்கு சட்டீஸ்கர் பகுதியில் மிகப்பசுமையான ஒரு கிராமமான குட்ரபாராவில் வாழ்ந்து வந்தார். அடிக்கடி தேசிய தலைப்புச் செய்திகளில் அடிபடும் சட்டிஸ்கரின் ஒரு பகுதி அல்ல இந்த கிராமம். இது, சுர்சுரா என்னும் வளமான மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். அந்த மாவட்டத்திலுள்ள பெரிய நகரமான அம்பிகாபூர் ஒரு பணப்புழக்கமுள்ள வியாபார ஸ்தலமாகும். அங்கிருந்து அந்தோணியின் ஊரான குட்டிபாராவுக்கு நேரடியான சாலை வசதி உள்ளது. அங்கே சந்தோஷ் சிங் என்று ஒரு மருத்துவர் கூட மருத்துவராகப் பணிபுரிகிறார். அது 10 நிமிட நடைதூரம்தான். அது அப்படி ஒன்றும் அணுகமுடியாத இருண்ட பகுதி அல்ல.

தனக்கு நினைவுக்குத் தெரிந்தவரை ஒவ்வொரு வருடமும் அந்தோணிக்கு மலேரியாவுக்காக சிகிச்சை அளித்ததாகக் கூறுகிறார் அம்மருத்துவர் ( டாக்டர் சிங்). இந்த வருடமும் அதேபோன்று சிகிச்சை அளித்தார். அந்தோணியும் குணமடைந்தார். ஆனால் ஒரு மாதத்தில் மீண்டும் நோயில் வீழ்ந்தார். ஆனால் அவரை அவரது குடும்பத்தார் டாக்டர் சிங்கிடம் அழைத்துச் செல்லவில்லை. அவரது மோசமான நிலையைப் பார்த்து அம்பிகாபூரிலுள்ள மிசன் மருத்துவமனைக்கு (Mission Hospital) கூட்டிச் சென்றனர். அங்கே அவர் இறந்தார். அந்தோணியின் அன்னை சொல்வது போல் அவர் உடம்பில் மலேரியாத் தொற்று இருக்கின்றதா என்று கண்டுபிடிக்கவில்லை. அவருடைய புறநோய்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட்டது. அதாவது மஞ்சள் காமாலை மற்றும் டைபாய்டுக்கு மட்டுமே சிகிச்சை தரப்பட்டது. அதனால்தான் இன்று அந்தோணி நம்மிடையே இல்லை எனலாம்.

சட்டீஸ்கரைப் பொறுத்தவரை மலேரியா என்பது பருவகால நோய் அல்ல. அது ஒரு ரகசிய தொற்று நோய். நூற்றுக்கணக்கான மக்களை ஒரே நேரத்தில் கொன்று குவித்துவிடும் நோயாகும். தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொருவரும் அது பற்றி அறியாமல்தான் இருக்கின்றார்கள். ஜூன் 15ம் தேதிவரை இந்தப் பத்திரிக்கை அலுவலகத்திலும் அதுபற்றி அறியாமல் இருந்தோம். எங்களில் ஒருவரை இழந்த பின்புதான் எங்களைத் தூங்கவிடாமல் செய்த, அடையாளம் தெரியாத அதுபற்றி தெரிந்து கொள்ள முனைந்தோம். தருண் சேராவத் 23 வயதே ஆனவர். சட்டீஸ்கரில் செய்ய வேண்டிய வேலை தரப்பட்ட போது மகிழ்ச்சியுடன் சென்று சேர்ந்தார். துசா மிட்டலுடன் இணைந்து பணியாற்றும் பத்திரிக்கையாளர். சட்டீஸ்கரின் தென் பகுதியிலுள்ள பஸ்தார் பகுதியிலுள்ள அபுஜ்மார் என்னும் காட்டுப்பகுதியில் நுழைந்தனர். அது அம்மாநிலத்தின் அபாயகரமான, மக்கள் குடியேறாத பகுதியாகும். அக்பரின் படை மற்றும் ஆங்கிலேய அரசின் சர்வேயர்களும் நுழையாத பகுதி என்று சொல்வார்கள். தருணை எதிர் கொண்ட எதிரியோ அமைதியாய் உயிர் குடிக்கும் ஒருநோய்.

தருண் அபுஜ்மார்க் பகுதியிலிருந்து திரும்பிய ஒரு வாரத்துக்குப்பின் காய்ச்சலில் படுத்தார். உடனே மஞ்சள் காமாலையும் டைபாய்டும் அவரைத் தாக்கியது. அவரின் குடும்பத்தார்களும் நண்பர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கோமாவில் வீழ்ந்து நினைவிழந்தார். ஒன்றரை மாதத்திற்குப்பின் குர்கான் ஊரிலுள்ள மேதன்டா என்னும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு குணமானார். மலேரியாவிலிருந்து காப்பாற்றப்பட்டார். ஆனால் திடீரென்று மூளையில் தீவிரமான ரத்தக்கசிவு ஏற்பட்டது. அவ்வளவுதான், அவர் போயே போய்விட்டார்.

கிரேக்க இதிகாசங்களில் உல்லன் நூல் பந்தை எடுத்துக் கொண்டு தீசியங் சுரங்கப் பாதையில் பிரித்து

விட்டுக்கொண்டே உள்ளே செல்வார். உள்ளே உள்ள அரக்கனைக் கொன்றுவிட்டு இருட்டான பாதையில் வெளியே செல்லும் வழியை கண்டுபிடிக்க அப்படி யுக்தி செய்ததாய் சொல்வார்கள். தருண் இறந்தபிறகு பத்திரிக்கையில் பணி செய்பவர்களை அந்த உல்லன் நூல்கண்டின் அடுத்த நுனியில் விட்டுவிட்டுப் போவதைப் போலவும் உள்ளே எத்தனை அசுரரோ அல்லது அரக்கர்களோ இருக்கிறார்களோ எப்படி கண்டுபிடிப்பது என்பதைப் போலிருந்தது. தருண் துன்பப்பட்டு வாழ்ந்து மடிந்ததைப் போல . இப்படி மனிதர்களை கொன்று குவித்திட மலேரியாவில் என்ன இருக்கிறது என்று எங்களை விசாரித்தறிய வைத்தது. அந்த அளவில் அவருக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

சட்டீஸ்கரில் மலேரியா பற்றிய உண்மை விவரம் பொய்களாலும் வரட்டுத்தனமான கணக்கெடுப்புகளாலும் சூழ்ந்துள்ளது. பால்சிபர் மலேரியா ஒன்று முதல் மூன்று சதவீத நோயாளிகளை கொல்லும் வகையை சேர்ந்தது என்று உலகம் முழுதும் அறிந்த உண்மை. உதாரணமாக யு.கே.(UK)வில் தொற்றுநோய் பற்றிய பத்திரிகை (Journal of infection)யில் 2007ம் வருடம் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சதவீதத்தினர் இறந்துவிட்டதாக செய்தி வந்துள்ளது. அதாவது 1500 நபர்களில் 10 நபர்கள் இறந்திருக்கிறார்கள். புதுடில்லியில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வைத்துள்ள மருத்துவக் குறிப்பேடு 2007ம் வருடம் 1,90,590 மக்கள் சட்டீஸ்கரில் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில் 75 சதவீதம் பால்சிரம் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கும் அதே நேரத்தில் அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை மூன்று தான். அப்படியெனில் இறப்பு சதவீதம் .00002 சதவீதம்.


பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள 5 வயதான ராகேஷ் மரக்கான் 3 வாரங்களாக காய்ச்சலால் அவதிப்படுகிறார்.

அலுவலகக் கணக்கெடுப்பு அல்லது புள்ளி விவரத்தை நம்ப முடியாதென்பதால் இந்தப் பிரச்சனையின் தீவிரத் தன்மையை மதிப்பிட வேறு வழிகளைக் கண்டறிய வேண்டியுள்ளது. சட்டீஸ்கரிலுள்ள மாநில சுகாதார வள மையம் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை ஆயிரங்களில் கணக்கெடுக்கும் வருடாந்திர தொற்றுநோய் அளவு (API) என்ற புள்ளி விவரத்தை நம்பி இருக்கிறது.

வருடாந்திர தொற்றுநோய் அளவு பற்றி 1000 மக்களில் 5 நபர் இறந்தாலே உலக சுகாதார நிறுவனம் அதை தொற்று நோயாக அறிவித்திருக்கிறது. சட்டீஸ்கரில் மலேரியாவிற்கான API index ஐந்துக்கு மேற்பட்டதாக 79 பிளாக்குகளில் உள்ளது. 42 பிளாக்குகளில் இது 10க்கு மேல் இருக்கிறது. சிலவற்றில் 100க்கும் மேல்.

மிக அதிகமாக பாதித்த பகுதிகள் பஸ்தர் காடுகள் மட்டுமல்ல. சமமாக சட்டீஸ்கரின் வடபகுதிகளும்தான். இங்கு, செயல்படாத பொது சுகாதார அமைப்பு இந்த முரண்பாட்டிற்குள் மறைந்து கொள்ள முடியாது.

டாக்டர் யோகேஷ் ஜெயின் என்பவர் பிலாஸ்பூருக்கு வடக்கில் லாப நோக்கு இல்லாமல் சுகாதார மையம் ஒன்றை நடத்தி வருகிறார். இவருடைய நோயாளிகளில் பெரும்பாலோனோர் சுற்றுப் பகுதியிலுள்ள காடுகளில் வசிப்பவர்கள். மலேரியா இங்கு மிகப்பெரும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஜன் சுவஸ்த்யா சஹயோக் (JSS) என்ற இவரின் மையத்தின் மூலமாக 2010ம் வருடம் ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள். இதில் பிலாஸ்பூரில் உள்ள கொண்டா என்ற பிளாக்கில் மட்டும் ஏறத்தாழ 100 நபர்கள் மலேரியாவினால் இறந்துள்ளனர். இங்குள்ள 10 பிளாக்குகளிலும் சேர்த்து 1000 நபர்கள் மலேரியாவால் இறந்திருக்கலாம் என கூறுகிறார் திரு. ஜெயின். ஆனால், அரசுத் தரப்பில் அந்த முழு, மாவட்டத்தில் வெறும் 9 இறப்புகள் மட்டுமே நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மாநிலம் முழுவதும் சேர்த்து கணக்கிட்டால் மலேரியாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை 5000த்தை தாண்டும். இந்திய அளவில் 2 சதவீத மக்கள் தொகை கொண்ட சட்டீஸ்கரில் இந்தியாவில் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் 14 சதவீதமாக இருக்கும் என்கிறார் டாக்டர் ஜெயின். ஆனால், மாநில அரசு இதை அப்பட்டமாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

சட்டீஸ்கர், இந்தியாவின் உள்நாட்டு, பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளான மாநிலமாக கருதப்படுவதால், எப்படி சுகாதார அமைப்பு சரியாக வேலை செய்யும் என ஒருவர் எதிர் பார்க்க முடியும். மலேரியா என்பது

அம்மாநிலத்தில் மாவோயிசத்தின் துணைத் தயாரிப்பு என்ற கருத்தை அரசு மறைமுகமாக பரப்புவதன் மூலம் மக்களை குரூரமான முறையில் கைவிட்டுவிட்டது.

மாவோயிஸ்டுகளின் பிடியில் சிக்கியுள்ளதாக கருதப்படும் அம்மாநிலம் 12 வருடங்களுக்கு முன்னால் மத்தியப் பிரதேசத்திலிருந்து பிரிந்து தனி மாநிலமானது. மலைவாழ் மக்களுக்கு தமக்கு உரிய மாநிலமாக கருதத்தக்க வகையில் பிற மேம்பாடுகளில் கவனம் செலுத்துவதற்காக தனி மாநிலம் அமைக்கப்பட்டதாக உறுதி மொழி அளிக்கப்பட்டது. ஆனால், சுகாதார கவனிப்பில் தோல்வி கண்ட பின்பு அது பொய்யான உறுதிமொழியாகக் கருத வாய்ப்புகள் உண்டு. ஒரு தலைமுறை கடந்த பின்பும் மாநிலத்தின் சுகாதார அமைப்பு தோல்வியிலேயே முடிந்துள்ளது.

அடிப்படைத் தோல்வி என்னவென்றால் யாரேனும் மலேரியாவால் பாதிக்கப்பட்டால் எந்தவித கவனிப்புக்கும் வழி இல்லை. அடிப்படை சுகாதார வசதிக்காகக் கூட இரண்டு மணி நேரம் நடந்து செல்ல வேண்டும். ஆனால், அந்த வசதி கூட மருத்துவர்களால் நடத்தப்படும் ஒன்றல்ல. பல் நோக்கு மருத்துவப் பணியாளர்களால் நடத்தப்படும் ஒன்று. அடிப்படையான மருந்து கொடுக்கும் மருத்துவ செவிலியர்கள், ஒரு ஆண் ஒரு பெண் என்று இருவர் கிராமப் பின்னணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், துணை சுகாதார மையத்தின் பொறுப்பாளர்கள். இவர்கள் 3000 மக்களின் சுகாதாரத் தேவைகளுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

கான்கர் – சட்டீஸ்கரில் உள்ள ஒரு மாதிரி மாவட்டம். இங்கு சாலை மற்றும் மின் வசதி இருக்கின்றது. இங்குள்ள மிட்டாகாம்ரி என்னும் கிராமத்தில் பணியாற்றும் தேவ்லி என்னும் சுகாதாரப் பணியாளரை தெஹல்கா பத்திரிகை குழு பார்த்து பேசியது. அந்த சுகாதார மையத்தின் கூரை பிய்ந்து ஒழுகல் கண்டுள்ளது. கீறல் விழுந்து ஈரமான மரக் கட்டில், குழந்தைகளைப் பிரசவிக்க தகுதியற்றதாக உள்ளது. ஆனால், 30 கி.மீ. சுற்றளவிற்கு இது மட்டுமே ஒரே சுகாதார மையம். எனவே, தேவ்லி, பிரசவத்திற்காக தன்னிடம் வரும் பெண்களை நேரடியாய் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவிடுகின்றார். இந்தத் துணை சுகாதார மையம் மிகவும் நோயுற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தகுதியற்றது. இதுபோன்று வேறு மூன்று சுகாதார செவிலியர் வித்தியாசமான நில பின்புலமுள்ள கன்கர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சொல்வதற்கும் இதுபோன்ற கதை இருக்கிறது. இந்த மூவரில் ஒருவர் விவாகரத்து ஆனவர். இன்னொருவர் குழந்தையுடன் தனித்து வாழும் பெண். ஆனால், இந்த மூன்று நபர்களும் தினமும் 15 முதல் 20 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்தே போய் தூரத்து கிராமங்களில் மருந்து கொடுத்து நோய் பரிசோதனை செய்து வருகின்றனர். இதுபோன்ற ஒரு கிராமத்தை பத்திரிக்கை குழு பார்வையிடச் சென்றபோது நல்ல மழையில் மாட்டிக்கொண்டோம். பச்சை பசேல் காடு கொட்டும் மழை மிக அழகாய்தான் இருந்தது. ஆனால், சாலை மழையில் மறைந்து போய்விட்டிருந்தது. ''இந்த சாலை நக்சல் குழுவினர் போட்டதுதான். நாங்கள் முதல் தடவை அந்த கிராமத்திற்கு சென்றபோது அவர்கள் எங்களை பற்றியும் எங்கள் பணிபற்றியும் விசாரித்தனர். மருந்து கேட்டார்கள். நம்மைப் போல அவர்களும் நோய்வாய்ப்படுவது உண்டுதானே'' என்று சொல்கிறார்கள்.

இந்த சுகாதாரப் பணியாளர்கள் மாதத்திற்கு ரூ10,000 முதல் 20,000 வரை மாத ஊதியமாகப் பெறுகிறார்கள். இத்தோடு சட்டீஸ்கரின் சுகாதார அமைப்பில் அடித்தளமாய் மிட்டானின் என்னும் தன்னார்வ பெண்கள் இருந்து வருகிறார்கள். இந்த 60,000 கால்நடை வீரர்களும் சட்டீஸ்கரின் சுகாதாரப் போரில் ஊதியம் வாங்காமல் தன்னார்வத்தோடு ஈடுபட்டுள்ளனர். அனைவரும் பெண்களே மிட்டானின் என்றால் பெண் நண்பர் என்று பொருள். பத்தாண்டுகளுக்கு முன்பு இது தனி மாநிலமாகிப் பிரிந்தபோது சுகாதார அமைப்பிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக உருவாக்கப்பட்டவர்கள். கிராமத்துப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரமான தாய்ப்பால் கொடுத்தல், சரிவிகித உணவு உண்ணுதல், சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் போன்றவற்றை கற்றுத்தருவதற்காக இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இவர்களிடம் மலேரியாவை ஒழிக்கும் மிகப் பெரிய பொறுப்பை அளிக்க முடியுமா என்பது மிகப்பெரியதொரு கேள்வியாகும்.

உதாரணமாக சட்டீஸ்கரின் தென்பகுதியில் உள்ள ஜெய்குர் என்னும் கிராமத்திலுள்ள கோவாசி பிமி என்னும் மிட்டானின் பற்றி பார்ப்போம், 28 வயதான முதுகு வளைந்த இவர் கதை மிகவும் சோகம். இவருடைய 9 வயது மகன் இனந்தெரியாத காய்ச்சலால் திடீரென்று தாக்கப்பட்டான். வேறு வழி எதுவும் இல்லாததால் ஊரிலுள்ள பேய் விரட்டும் மந்திரவாதியிடம் எடுத்துச் சென்றார்.

பீமி நன்றாகப் பயிற்சி பெற்றுள்ளார். கிராமத்தார்களிடம் இதுபோன்று நோய்வாய்ப்படும்போது கண்ணாடித் தகடில் இரத்தத்தை எடுத்துக் கொண்டு அடிப்படை சுகாதார நிலையத்திற்குச் சென்று சோதித்தறிய வேண்டும். பேய் ஓட்டிகளிடம் செல்லக் கூடாது என்று சொல்ல வேண்டிய பயிற்சி பெற்ற அப்பெண் தன் வீட்டிலேயே அப்பிரச்சனை வந்தபோது வேறு வழியின்றி மந்திரவாதியிடம் தான் சென்றிருக்கிறார் என்றால் உள்ளூர் வசதிகளை பற்றி நம்மால் கற்பனை செய்து கொள்ள முடியும். பீமி பற்றி நாம் குறை சொல்ல முடியாது. பீமிபோல் ஒரு இரண்டு டஜன் மிட்டானின்களை சட்டீஸ்கர் முழுவதும் சந்தித்து நாங்கள் பேட்டி கண்டபோது அவர்கள் தம் பணிகள் பற்றி மிகப் பெருமிதமாகத்தான் பேசினார்கள். ''எங்கள் கிராமத்துக்கு

நாங்கள் துர்காதேவி போன்றவர்கள் நாங்கள் வீரர்கள்'' என்று ஒரு பெண் கூறினார். பீமியின் கதை சுகாதார அமைப்பின் குறைபாடுகளை மிகத் தெளிவாக புலப்படுத்துகின்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மலேரியாவால் இறந்து கொண்டிருக்கும்போது மலேரியாவை ஒழிக்கும் பெரும் பொறுப்பை இந்த தன்னார்வலர்களாக இருக்கும் மிட்டானின்களிடம் அரசு விட்டுவிடலாமா ?

மேலும் இந்த மாநிலத்திலுள்ள தண்டேவாடா மாவட்டத்தில் ஈஞ்சாராம் என்னும் கிராமம் உள்ளது. போத்துராஜா என்பவர் தண்டேவாடா மாவட்ட பஞ்சாயத்துகளின் உபதலைவர் அதுமட்டுமல்ல மிக்க செல்வாக்கும் நல்ல பண வசதியும் படைத்த ஒரு மனிதர். இத்தனை இருந்தும் அவரால் தன்னுடைய 14 வயதான போத்து லலிதாவை மலேரியாவிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

லலிதா தனக்கு காய்ச்சல் இருப்பதாக ஏப்ரல் 5ம் தேதி சொல்லி இருக்கிறாள். அவளுடைய 8ம் வகுப்பு தேர்வு நெருங்கிக் கொண்டிருப்பதால் அவள் தந்தை ராஜா உடனே ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ரத்தப் பரிசோதனை செய்திருக்கிறார். இரத்தப் பரிசோதனையில் ஏதும் பிரச்சனை இல்லை என்றுதான் வந்திருக்கிறது. இருந்தபோதும் அவளின் காய்ச்சல் விட்டபாடில்லை. மலேரியா பற்றி அறிந்த மற்றும் அது சம்மந்தமாக பணியாற்றும் மருத்துவர்கள் இதுபோல அடிக்கடி நடக்கும் என்று சொல்கிறார்கள். மலேரிய கிருமியான பிளாஸ்மோடியம் பால்சிபோரம் என்னும் கிருமியைக் கண்டு பிடிக்க நுட்பமான சோதனை தேவைப்படுகிறது. சிரமப்படாவிட்டால் அதை எளிதாகக் கண்டுபிடித்துவிட முடியாது.

ஆனால், போத்து ராஜா மிக உறுதியாக தன் மகளை காப்பாற்றிவிட வேண்டும் என்று நினைத்து கோன்டாவிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகளைக் கொண்டு சென்றார். அதன்பின்பு ஆந்திர மாநில எல்லைப் புறத்திலுள்ள பல மருத்துவமனைகளுக்கு அதாவது, பத்ராசலம், கொத்தகூடம், ராஜமுந்திரி என்று போய் கடைசியில் கம்மம் வரை சென்றார். ராஜமுந்திரியிலுள்ள மருத்துவமனையில்தான் மருத்துவர்கள் லலிதாவுக்கு மலேரியா இருப்பதைக் கண்டிறிந்தார்கள். ஆனால், அது மிகத் தாமதமான கால கட்டம். ஆகஸ்டு 4ம் தேதி லலிதா இறந்து போய்விட்டாள். அவளுடைய மருத்துவப் பதிவேடுகள் அனைத்தும் பழங்குடி மக்களின் மரபுப்படி அவளோடு புதைக்கப்பட்டுவிட்டன. லலிதாவின் மரணமும் சட்டீஸ்கரின் கண்ணுக்கு தெரியாத மரணங்களில் ஒன்றாகிவிட்டது. போத்துராஜ்சல்வா ஜுடும் (Salwas Judum) அமைப்பின் தலைவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர். இந்த அமைப்பு மாநில அரசால் உள்நாட்டு பாதுகாப்பை கவனித்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டு அது தோல்வியுற்றதால் பின்பு கலைக்கப்பட்டுவிட்டது. அவர் தம் கிராமமான அசேர்கூடாவைவிட்டு விட்டு ஈஞ்சாராம் கிராமத்திலுள்ள முகாமில் தங்கியிருந்தார். ஆனால், காவல்துறைப் பாதுகாப்பு, பணச் செழுமை மற்றும் பயணம் செய்யக் கூடிய வாய்ப்பு போன்றவை இருக்கும் அவரால் தன் மகளை காப்பாற்ற முடியாமல் போனது. இதுதான் சட்டீஸ்கரில் பலர் மந்திரவாதிகளிடமும் நம்பிக்கைவாதிகளிடமும் போகக் காரணம். மருத்துவம் மீது நம்பிக்கை இருந்தும் முன்னது வெற்றி பெற்றுவிடுகின்றது. முறையான விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறை இல்லாததால், பழங்குடி மக்கள் மந்திரவாதி போன்றவர்களை நாடவேண்டியுள்ளது. இது எப்போதும் அவர்களின் மூடப்பழக்கமாக நிர்வாகத்தாலும் ஊடகங்களாலும் புரிந்துகொள்ளப்படுகிறது.

மாநிலத்திலுள்ள சர்கூஜா மாவட்டத்தில் நம்பிக்கையின்மை மற்றும் குருட்டு பார்வைதான் நிலவுகின்றது. பல சுகாதாரப் பணியாளர்களைப் பேட்டி கண்டதிலிருந்து 70க்கும் மேற்பட்ட இறப்புகள் இந்த மாவட்டத்தில் மட்டும் இந்த ஒரு வருடத்திலேயே நிகழ்ந்து இருக்கின்றது என்று தெரிகின்றது. ஆனால், மாவட்ட முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் ஷாம்சு டோகா அப்படியா என்று ஆச்சரியப்படுகிறார். அவர் கூறுவது சராசரிக்கும் மிகக் குறைந்த எண்ணிக்கைச் சாவு என்று கணக்கு சொல்கிறார். ''சர்கூஜா மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் கூட API அளவில் இரண்டுக்கு மேல் மலேரியா உள்ளது என்று கூறிவிட முடியாது'' என்று வருடாந்திர அட்டவணையை காட்டி அடித்துக் கூறுகிறார். ஆனால், ''ஐந்துக்கு மேற்பட்டுள்ளது என்று தெஹெல்கா கூறியபோது, இது தொற்றுநோயாக இருக்க வேண்டும் என கூறினார்.

எங்கள் கூற்றினால் திருப்தி அடையாத டோகா, மாவட்ட மலேரிய அதிகாரி டாக்டர் அனில் பிரசாதை கூப்பிட்டு அனுப்பினார். டாக்டர் அனில் பிரசாத் சர்கூஜா முழுவதும் API 5.5ஐ கடந்துவிட்டதாகக் கூறினார்.

தனக்குக் கீழே பணி செய்பவரால் உண்மை வெளிச்சத்துக்கு வந்துவிட்டதை மூடிமறைப்பதற்காக தன் அபிப்பிராயம் ஒன்றைக் கூறினார், மாவட்ட சுகாதார முதன்மை அதிகாரி. ''இந்த பழங்குடி மக்களுக்கு பரம்பரையாகவே மது அருந்தும் பழக்கம் உள்ளது. அதுதான் அவர்கள் நோய்த் தாக்குதலுக்கு ஆளாக்குகிறது'' என்று சொல்லி முடித்தார். அதற்கு துணையாக டாக்டர் பிரசாத் கூற ஆரம்பித்தார். பழங்குடி மக்களில் 80 சதவீதத்தினர் குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள். நிறையச் சாப்பிடமாட்டார்கள். ஆனால், நன்றாகக் குடிப்பார்கள். எனவே, சர்க்கரை அவர்கள் ரத்தத்தில் கூடுதல் ஆகிவிடுகின்றது. மேலும், அவர்கள் மலேரியாவிற்கான சிகிச்சைக்கு சரியான ஒத்துழைப்பு தருவதில்லை. மலேரியா தாக்கியதும் இறந்துவிடுகின்றார்கள்.



காய்ச்சல் அவரது மாறாத துணையாகிவிட்டதாக
60 வயது ஜிம்மி குஞ்சம் சொல்கிறார்

ஒரு சுகாதார அமைப்பு சரியான மருத்துவ சிகிச்சை செய்யாமல் மக்களை (தன்னார்வலர்களை) வைத்து நடத்தச் சொல்லிவிட்டு பழங்குடியினரின் மரபுகளைக் காரணங்காட்டி குற்றஞ்சொல்லி அவர்களை அறியாமை என்னும் போர்வையால் மூடிவிடுகின்றது. டாக்டர் மோகா மற்றும் அவருடைய பணியாளர்கள் போன்றவர்கள் நீதி, ஒழுக்கத்திலிருந்து வழுவியவர்கள் அல்ல. கண்டுகொள்ளாத தன்மைதான். இதே தன்மை மேல்கட்டுப் பணியாளர்களிடமும் இருக்கிறது. ரெய்ப்பூரில் உள்ள சுகாதார ஆணையாளர் பிரதாப் சிங். "இந்த வருடத்தில் மலேரியாவால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இதுவரை யாருமில்லை என்று கூறுகிறார். "இவரிடம் போய் என்ன கேட்க முடியும் என்று தோன்றுகிறது.

மாநில அரசால் 2011ம் ஆண்டில் 'மலேரியா பணிக்குழு' என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை அது செய்துள்ளது என்ன என்று கேட்டால் சில வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்று டாக்டர் சிங் கூறுகிறார். தெஹெல்கா குழு மேலும் அவரைக் கேட்டது. வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் அதில் DDTயோ அல்லது அதற்கும் மேம்பட்ட பூச்சிக் கொல்லியோ உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதா'' ஏனெனில் இந்திய மருத்துவ ஆய்வு குழுமம் (Indian Council for Medical Research) சட்டீஸ்கர் அரசிடம் கூறியுள்ளது என்னவென்றால் 80 சதவீத மலேரியா பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் DDT எதிர்ப்புத் திறன் வளர்ந்து பூச்சிக் கொல்லி பயனற்றதாகிவிட்டது என்று அதற்கு சுகாதார கமிசனர் கூறிய பதிலானது மிக வியப்பானதாகும். "நான் அந்த பணிக்குழுவில் (Table Force) உறுப்பினர் இல்லை. நீங்கள் சொல்வது கேட்பது பற்றியெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது'' என்கிறார். பருவமழை துவங்குவதற்கு முன் ஒரே ஒரு முறைதான் இந்த குழு கூடி இருக்கின்றது.

போடியம் ஜொகா, போத்துராஜாவின் கிராமத்தை சேர்ந்தவர்தான். அவருடைய சோக முடிவு பற்றி தெரிந்தால் இப்படி பொறுப்பில்லாமல் பேசமாட்டார்கள். ஏப்ரலில் ஜோகாவுக்கு மோசமான காய்ச்சல் கண்டது. உடனே கோன்டா கம்யூனிட்டி சென்டருக்குத்தான் போக நினைத்தார். இரத்தப் பரிசோதனை கூட செய்யுமுன்பு ஏப்ரல் 14ல் இறந்து போய்விட்டார். மாவட்டத்தின் மறு கோடியிலுள்ள பிலாஸ்பூரில் சுகாதாரப் பணியாளரும் சமூக ஆர்வலருமான பிரபுல் சன்டேல் குரல்கம்மிக் கொள்ள, மருத்துவ உதவி நாடி ஓடுகின்ற போதும் மருத்துவ அமைப்பு அவர்களைக் காப்பாற்றத் தவறிவிடுகிறது என்று கூறுகிறார்.

சன்டேல், பிலாஸ்பூரில் உள்ள டாக்டர். ஜெயினுடைய ஜன் ஸ்வஸ்திய சகயோக் நிறுவனத்தில் பணி செய்கிறார். 2010ம் வருடம் ஒருவர், தூரத்திலுள்ள கிராமத்திலிருந்து கடுமையான காய்ச்சலுள்ள தம் மகனை அழைத்துக்கொண்டு ரத்னாபூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு வந்தார். அந்த பையனை பார்த்தவுடனேயே அங்கிருந்த மருத்துவர் அவனுக்கு மூளையில் மலேரியா தாக்கி இருக்கிறது. மோசமான நிலையில் இருப்பதால் ராய்பூருக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும் என்று சொன்னார். தந்தையோ தான் போய் பணம் புரட்டிக்கொண்டு வருவதாகவும் அன்றிரவு மட்டும் தன் மகனுக்கு ட்ரிப்ஸ் போட்டு அங்கேயே வைத்திருக்குமாறு எவ்வளவோ மன்றாடியும் மருத்துவர் கண்டு கொள்ளவில்லை. வைத்திருக்கவும் அனுமதிக்கவில்லை.

எனவே வேறு வழியில்லாமல் சைக்கிளின் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு 10 கி.மி. தூரத்திலுள்ள கிராமத்துக்கு சென்றார். அன்றிரவே அவர் மகன் இறந்துவிட்டார். நவீன மருத்துவத்தில் நம்பிக்கையில்லாத அறியாமைமிக்க தந்தை அல்ல இவர். நவீன மருத்துவம்தான் அவரை தோல்விக்குத் துரத்திவிட்டது.

மலைவாழ் மக்கள் தம்முடைய அறியாமை காரணமாக சாகத்தான் வேண்டும் என்றால் மத்திய ரிசர்வ் போலீஸ் (CRPF) பற்றி என்ன சொல்வது? CRPF சேர்ந்த படைகள் சண்டையிடுவதற்காக பஸ்தர் செல்லப் பணிக்கப்பட்டனர். 168வது CRPF காம்ப் திமாபூரில் இருந்தபோது 2011ல் பஸ்தரின் நுழைவாயிலில் ஒரு இறப்பு நிகழ்ந்தது. இறந்தவர் பெயர் ஓம்பால்யாதவ். 28 வயதே ஆன அவருக்கு கடுமையான காய்ச்சல் கண்டது. இரத்தப் பரிசோதனை எதுவும் செய்யப்படவில்லை. அவருடைய சக

பணியாளர்களுக்கு அந்த அமைதியான கொலைகாரனைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. அவருக்கு மலேரியா வந்திருக்கும் என்றும் யோசிக்கத் தோன்றவில்லை.

அவர் இறந்த பிறகு முகாம் (Camp), தொற்றுநோய் பற்றி விழித்து எழுந்தது. இப்போது முகாமிலுள்ள ஒவ்வொரு ஜவானும் குளோரோகுயின மாத்திரைகளை வாரம் இரண்டு முறை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தனர். அதையே தான் தெஹல்கா குழுவினர் பஸ்தருக்குப் போவதற்கு முன்னால் செய்தனர். இது ஒரு தடுப்பு மருந்து. ஆனால், இது மட்டுமே மாயமெதுவும் செய்துவிடாது. உண்மையில் தேவையானது முறையான முன் எச்சரிக்கை நடவடிக்கைதான். இதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? முறையாக பூச்சிக் கொல்லி மருந்துகளை பாதிப்பு உள்ள இடங்களிலெல்லாம் தெளித்து வரவேண்டும். ஒரு சில இடங்களை விட்டு விட்டு தெளிக்கப்பட்டால் அந்த நுண்ணுயிர் கிருமிகள் பூச்சித் தடுப்பு மருந்துகளுக்கு மீறியனவாக மாறி மிக்க வேகத்துடன் தாக்குதலைத் துவங்கிவிடும்.

முகாம்களில் ஜவான்கள் முறையாக DDTஐ தெளித்து வருகிறார்கள். ஆனால், அவர்களுடைய வேலை முகாம்களுக்கு வெளியில் அதுவும் காடுகளில் மருந்து தெளிக்கப்படாத மாநில அரசின் கவனமில்லாத பகுதிகளில்தான். இந்த வருடம் இரண்டு ஜவான்கள் கடுமையான காய்ச்சல் காரணமாக அவ்விடத்தை விட்டு அனுப்பப்பட்டுவிட்டார்கள். மலேரியா தாக்கும் பருவம் (Season) இப்போதுதான் துவங்கி இருக்கிறது.

பெரம்கார் (Behramgarh) நகரிலுள்ள கம்யூனிட்டி ஹெல்த் சென்டரில் உள்ள பதிவு பெற்ற மருத்துவரான மருத்துவ அதிகாரி (RMO) சூர்யகாந்த் கஷ்யப் மலேரியா மிகவும் கவலை கொள்ள வேண்டிய ஒன்று என்று உறுதியாகச் சொல்கிறார். அவரிடம் வரும் 90 சதவீத மக்கள் மலேரியாவால் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறார்கள் என்கிறார். வெளி நோயாளிகள் பிரிவில் தினமும் 100 நபர்கள் அவ்வாறு வருகிறார்கள். இரண்டு மருத்துவ அதிகாரிகளும் இரண்டு RMOவும் தான் இருக்கிறார்கள். போதுமான மருத்துவப் பணியாளர்கள் அங்கு இல்லை. ஏனெனில் அங்கு வந்து பணியாற்றப் பணித்தால் வந்து பணி செய்ய யாரும் விரும்புவது இல்லை.

அரசு ஒரு அமைப்பு ஏற்படுத்தி உள்ளது. மலேரியா கண்டறியும் துரித சோதனைப் பெட்டிகளை செய்து தர ஆணை பிறப்பித்துள்ளது. இந்தப் பெட்டிகள் இதற்காகப் பயிற்சி பெற்றுள்ள கிராமங்களிலுள்ள மிட்டானின்களிடம் கொடுக்கப்படவுள்ளதாம். ஆனால், இந்தப் பரிசோதனைப் பெட்டிகளும் குளோரோகுயின் மாத்திரைகளும் போதுமான அளவுக்கு விநியோகிக்கப்படுவதில்லை.

ஒரு நபர் கடுமையான காய்ச்சலால் தாக்கப்படும்போது இந்த மிட்டானின்கள் தன்னார்வலர்களாக இருப்பதால் எல்லா வேலைகளையும் இலவசமாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது கடினமான பணி. கண்ணாடி தகட்டில் எடுக்கப்பட்டுள்ள இரத்தத்தை பல கி.மீ. தூரத்திலுள்ள பல்துறை மருத்துவப் பணியாளரிடம் நடந்தே போய் சீக்கிரமாகக் கொடுக்க வேண்டும். அவர் பல கி.மீ. தூரம் நடந்தே போய் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்பிக்க வேண்டும். இது இரத்தம் எடுத்த குறிப்பிட்ட நேரத்துக்குள் நடந்தாக வேண்டும்.

அப்படி நடக்கவில்லையெனில் இரத்தம் சூட்டின் காரணமாக இளகிவிடும் அல்லது மழை காரணமாக கெட்டுவிடும் அல்லது காலங்கடந்ததாகி சரியான பயன்பாட்டுக்குரியது அல்லாததாகிவிடும். கஷ்யப் ஒருவர் மட்டும்தான் இதுபற்றி விளக்கமாய் தெளிவுறுதியுடன் கூறினார். இதையே மிட்டானின்களும் சுகாதாரப் பணியாளர்களும் வலியுறுத்தினார்கள்.

மத்திய ஆயுதப்படை (CAF)யைச் சேர்ந்த ஜவான்கள் ஹைவே (highway)யில் சர்கே கூடாவிற்கும் அங்கிருந்து கொத்த கூடம் கிராமத்தை நோக்கிப் போய் கொண்டிருந்தார்கள். ஜுலை 28ம் தேதியன்று மோதல் சாவு என்ற பெயரில் பல சாதாரண மக்களை இந்தப் படையைச் சேர்ந்த ஜவான்கள் கொன்று குவித்ததிலிருந்து இந்தப் பாதைக்கு “கொல்லும் பாதை” என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கமலா காக்கூ என்னும் சுகாதாரப் பணியாளர் அந்த மோதல் சாவு பற்றிக் குறிப்பிடும்போது முகமே சிவக்கிறது. மாநில அரசு பொது மக்களை சர்கே கூடாவில் கொன்று குவிக்கும் முன்னரே கூட கண்டு கொள்ளவோ கவனிக்கவோ இல்லை. ஜுலை 28க்குப் பிறகு மக்கள் தள்ளி வைக்கப்பட்டு விட்டதாகவே மக்கள் கருதுகிறார்கள்.

இந்த கிராமத்தில் தாகா சமகர் என்னும் பெண் தன் மூன்று வயது மகன் மனோஜ்–ஐ காய்ச்சல் காரணமாக பசகூடா நலமையத்துக்கு எடுத்துச் செல்கிறார். அங்கு மருந்துகள் எதுவும் இல்லாததால் இரண்டு நாட்கள் கழித்து வருமாறு அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். இரத்தப் பரிசோதனையும் செய்யப்படவில்லை.

மலேரியாவினால் சட்டீஸ்கரில் மக்கள் செத்து மடிந்துகொண்டிருந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை போல் தோன்றுகின்றது. இந்த நோயின் மறுபக்கம் பார்த்தால் வறுத்தெடுக்கும் வறுமை. டாக்டர் ஜெயின் சொல்வதுபடி பார்த்தால் நவம்பர் டிசம்பர்களில்தான் இது உச்சத்திலிருக்கும் காலம். அந்த சமயத்தில்தான் அறுவடைக் காலம் முடிந்து போய் வீட்டிலுள்ள தானியங்களெல்லாம் தீர்ந்து போயிருக்கும் காலம்.

பசியோடிருக்கும் மனிதர்களை மலேரியா தாக்குவது போல வேறெதுவும் தாக்கமுடியாது.

கொத்தகூடம் கிராமத்திலுள்ள மார்க்கம் ராஜீவின் மூன்று வயது மகள் இதற்கு சாட்சியம். அந்தக் குழந்தைக்கு சத்துக் குறைவு காரணமாக உடல் மெலிந்து எலும்புகளெல்லாம் தெரிகிறது. அது அழும்போது இன்னும் எலும்புகள் வெளியே துறுத்திக்கொண்டு இருக்கிறது மூச்சுவிடுவதற்காக அழுகையை நிறுத்தும்போது மூச்சு விடுவதே அழுகை சத்தத்தை விடப் பெரிதாகக் கேட்கின்றது. அந்தக் குழந்தைக்கு இன்னும் பெயரிடப் பெறவில்லை. ஏனெனில் அவள் பெற்றோருக்கு அவளை உயிரோடு முதலில் காப்பாற்றிட வேண்டுமே என்னும் கவலைதான் பெரிதாய் இருக்கிறது.

பஸ்தர் காடுகளில் உயிர் பிழைக்கும் போராட்டம் மிகப்பெரிய போராட்டமாகும். எப்போதும் பயத்தில் இருக்க வேண்டும். சுகாதாரப் பணியாளர்கள் இங்கு குணப்படுத்துபவர்கள் மட்டுமல்ல தனிநபர்கள் எனும் வகையில் அசாதாரண தெம்பும் தைரியமும் உடையவர்கள்.

ஆனால், மாநிலத்தின் மறுகோடியிலுள்ள சர்கூஜா என்னும் பகுதி அமைதிப் பிரதேசம் அங்கு எந்தவித தொந்தரவும் கிடையாது. எனவே, அதிகாரிகள் அதைச் சொல்லி தப்பிக்க முடியாது. இந்தப் பகுதி கிராமங்களில் கொசுக்கள் கட்டுப் பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தால் மிகக் குறைந்த அளவில்தான் மக்கள் நோயில் வீழ்வர். மாநிலத்தின் மற்ற பகுதிகளைப் போன்றே இங்கும் சுகாதார அமைப்புகள் தோல்விதான். மலேரியாவை கண்டறியும் சோதனைப் பெட்டிகள் அதற்கான மருந்துகள் எல்லாம் தேவையான அளவில் இல்லை. கொசு வலைகள் கூட பற்றாக்குறைதான். இந்த வருடத்தில் பருவ மழை துவங்கி கொசுக்களின் எண்ணிக்கை பெருகிய பின்புதான் அதிகாரிகளுக்கு 100 மெட்ரிக் டன் அளவு DDT பற்றாக்குறை உள்ளது எனத் தெரிய வந்தது. எனவே ஒரிசா மாநிலத்திலிருந்து தான் DDT தருவிக்கப் போகிறார்கள். சீதாபூர் மாவட்டத்திலுள்ள லலித்பூர் கிராமத்தில் மூன்று இளம் சிறுவர்கள் DDT தெளிக்கும் வேலை செய்கிறார்கள். அவர்கள் தம் வயதை மீண்டும் மீண்டும் 19 என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் 14 வயதை தாண்டி இருக்க மாட்டார்கள் என்று தோன்றுகின்றது. பத்திரிகைக் குழுவினர் வரப்போகிறார்கள் என்று அவர்களிடம் 19 வயது என்று சொல்ல சொல்லி வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் அவர்கள் DDT பவுடர்களை வெறும் கைகளில் கலந்து கொண்டிருந்தார்கள். “எங்கள் கையுறைகள் இன்று கிழிந்து போய்விட்டன” என்றனர். அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் பெரியவர்ககளின் திட்டமிட்ட செயல்கள் அவை. இவர்கள்தான் மலேரியாவை ஒழிக்கப் புறப்பட்டிருக்கும் மன்னனின் சிப்பாய்கள்.

இவைகளை சமாளிக்க வழிகள் இல்லாமல் இல்லை. மாநில சுகாதார ஆதார மையம் State Health Resource Centre (SHRC) ஆக்சன் எய்டு, இந்திய சொசைட்டி மற்றும் யூரோப்பியன் யூனியன் பண உதவியுடன் 2002ம் வருடம் சில பணிகளைத் துவக்கியது. மிட்டானி திட்டம் SHRCயால் தான் நிர்வகிக்கப்படுகிறது. இது தன்னார்வலர்களால் ஆன ஒன்று என்பதோடு பல குறைபாடுகளோடு செயல்படுத்தப்பட்டாலும் இந்தப் பயிற்சி மிக்க பயன் அளித்தது. உதாரணமாக பெண்களை குழந்தைகளுக்கு தாய்பாலூட்ட வற்புறுத்துவது, மலேரியாவைக் கண்டறிய இரத்தப் பரிசோதனைக்கான கண்ணாடித் துண்டுகளை மருத்துவமனைக்கு அனுப்புவது, கொசுவலை பயன்படுத்த வேண்டியதின் அவசியம் பற்றி கிராமத்து மக்களுக்குப் புரிய வைப்பது போன்றவற்றைக் கூறிடலாம். இருந்தபோதும் SHRC பணியாளர்களுக்கும் பிற பொது மருத்துவ ஆரோக்கியப் பணி செய்பவர்களுக்குமான தொடர்பு என்பது இல்லாமல் தான் இருக்கின்றது.

அரசிற்கு அப்பாற்பட்டு மிகப்பெரிதாய் பாராட்டத்தக்க அளவில் மாநிலத்தின் பல பகுதிகளில் வேலைகள் நடந்திருக்கின்றன. 1983ம் வருடம் சட்டீஸ்கர் மத்தியப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தபோது முற்போக்கு எண்ணம் கொண்ட சில மருத்துவர்கள் சுகாதார சிகிச்சை நிகழாத அல்லது ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தங்கள் கவனத்தை செலுத்தினர். அவர்களில் டாக்டர் பினாயக் சென் மற்றும் டாக்டர் சைபால் ஜனா போன்றவர்கள் அடங்குவர். அவர்கள் உருவாக்கிய மருத்துவமனை சட்டீஸ்கரின் சுரங்கப் பகுதிகளின் மிகவும் உள்ளே அமைந்துள்ள தள்ளி ராஜ்ஹரா (Dalli Raj hara)வில் அமைந்து உள்ளூர்வாசிகளின் திறனை பாரம்பரியத்தை காட்டுகின்றது. மருத்துவமனை பணியாளர்களுக்காக பணியாளர்களால் உருவாக்கப்பட்டு தற்போது பணியாளர்களாகச் சேர்ந்து உருவாக்கிய அறக்கட்டளை (Trust)யினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இன்றும் நோயாளிகளிடம் ரூபாய் மூன்று முதல் ஐந்துவரை கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. நோயாளிகள் வெளி நோயாளிகள் பிரிவுக்கு வெளியே பாதை நெடுக உட்கார்ந்து இருப்பதைப் பார்க்க முடியும். தன்னால் முடிந்த அளவு மருத்துவ சேவையை செய்கின்றது. மிகச் சிறந்த அமைப்பு முறை இங்கு செயல்படுத்தப்படுகின்றதென்று சொல்லிவிட முடியாது. ஆனால், இங்கு வருகின்ற நோயாளிகளின் தேவைக்கும் எதிர்பார்ப்புக்கும் தேவையான மருத்துவம் கிடைக்கிறது என்று கூறலாம்.

இந்த மருத்துவமனை செயல்பட்டு வருவதே அரசாங்கத்தின் சுகாதார அமைப்பில் ஒரு புள்ளியாக கவனத்தை ஈர்த்துள்ளது. ஏழைகளின் ஆரோக்கியம் உங்களின் கவனமாக இருக்குமானால் அவர்களுக்கு ஏற்ற மருத்துவ அமைப்பு ஒன்றை ஏற்படுத்திட முடியும். பிலாய்

உருக்காலையிலுள்ள தினக்கூலித் தொழிலாளர்களால் ஒரு மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தி ஒரு மருத்துவமனையை தம்முடையதாக செயல்படுத்திட முடிகிறதென்றால் ஏன் அரசாங்கத்தால் செயல்படுத்திட முடியாது ?

மாநிலத்தின் மறுகோடியில் டாக்டர் ஜெயின் மற்றும் அவருடைய குழுவினர் ஒரு NGO ஒன்றை ஜன் ஸ்வஸ்திய சகயோக் (JSS) என்ற பெயரில் பிலாஸ்பூருக்கு வெளியே கனியாரி (Ganiyari) என்ற இடத்தில் நடத்தி வருகிறார்கள். 10 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இது பச்சை பசேல் என்று மரங்களிடையே வார்டுகளுடன் அமைந்துள்ளது. இங்குள்ள மருத்துவர்களும் ஏழைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை உள்ளவர்களாய் பழங்குடி மக்களிடமும் அதே அக்கறையுடன் செயல்படுகிறார்கள். முகாம்கள் அடிக்கடி நடத்துகிறார்கள். பத்தாண்டுகளாக மக்களுக்கு ஒருங்கிணைப்பு முறையில் இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் காய்ச்சல் உள்ளவர்களின் இரத்தம் கண்ணாடித் தகடுகளில் தனித்தனியாக சேகரிக்கப்படுவதற்கு ஒரு நபர் நியமிக்கப்படுகிறார். இக்கண்ணாடி தகடுகள் ஒரு சோப்புப் பெட்டிகளில் அடுக்கப்பட்டு காலையில் பள்ளிக்கு பஸ்ஸில் செல்லும் பிள்ளையிடம் கொடுத்தனுப்பப்படுகிறது. பஸ் நிற்கும் இடத்தில் JSS நபர் சோப்பு பெட்டிகளை பெற்றுக் கொள்கிறார். கண்ணாடித் தகடுகளில் உள்ள இரத்தம் தேவையின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு சோதிக்கப்பட்டு முடிவுகள் மதியம் செல்லும் பஸ்ஸில் கொடுத்தனுப்பப்படுகின்றன.

“நகரத்தில் உள்ள ஒரு நபர் தனக்கு மலேரியா வந்தால் எப்படி அதனை நிர்வகித்து கொள்வாரோ நர்ஸ் மற்றும் மருத்துவர் மூலம் நிர்வாகம் செய்து கொள்வது போல் கிராமத்து மக்களும் தங்களை காப்பாற்றிக் கொள்கின்றனர். அப்படி இருக்கும்போது பிறிதோர் இடத்தில் மக்களை எப்படிக் காப்பாற்ற முடியாமல் போகும்” என்று கேட்கிறார் டாக்டர் ஜெயின். டாக்டர் ஜெயின் கேட்கும் இதே கேள்வியைத்தான் சட்டீஸ்கரிலுள்ள குடும்பத்தில் பலரை இழந்த மீதி குடும்ப நபர்கள் கேட்கிறார்கள்—மலேரியாவால் பாதிக்கப்பட்ட இவர்கள் கேட்பது நியாயந்தானே.

சட்டீஸ்கரின் கதையைப் போல்தான் ஒடிஸ்ஸாவின் கதையும் மலேரியாவால் இறந்தவர்களின் எண்ணிக்கையும் இருமடங்குதான். மனித வளர்ச்சி அமைப்பு (Human Development Foundation ) என்னும் அமைப்பை நடத்தும் சுதர்சன் தாஸ் அரசுக்கு “இந்த மூன்று Ms”களை சமாளிப்பதற்கான அரசியல் உறுதி (Political will) இல்லை என்கிறார். மலேரியா, சத்துக் குறைவு மற்றும் இறப்புகள் (Malaria, Mal Nutrition and Mortality) என்பவைதான் அம்மூன்றும், மலேரியா இந்தியாவில் சிவப்பு எல்லைகளை தாண்டி அதாவது சட்டீஸ்கர், ஒரிசா, ஜார்கண்ட் என்று போய் கொண்டே இருக்கிறது. இது மேலும் வடகிழக்கிலுள்ள 8 மாவட்டங்களில் ஐந்துக்கு பரவி விட்டது. மிசோரம் அதில் மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளது. மிக ஆழமாக ஆய்ந்தறிந்து பார்த்தால் எந்தெந்த மாவட்டங்களும் அங்குள்ள கிராமங்களும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளதோ அங்கெல்லாம் மலேரியா மிகப் பரவலாக ஆழமாய் நுழைந்திருக்கின்றது.

இது காரணமாக இந்த கதையை இன்னும் விவரிப்பது மிகக் கடினமானதாய் இருக்கின்றது. இறுதியாகச் சொல்ல வருவது அதிலும் கண்ணை மூடிக்கொண்டு உறுதியாய் சொல்லக் கூடியது என்னவென்றால் ஏழைகள் இறக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் ஏழையாய் இருக்கின்றார்கள். நீங்கள் சமூகப் பொருளாதார ஏணியின் கீழே வசிப்பவர், உங்களுக்கென்று நிலம் எதுவும் சொந்தமானதில்லை என்றால் ஏதாவது ஒரு நோயால் நீங்கள் இறந்துவிடப் போகிறீர்கள். சட்டீஸ்கரில் என்றால் அது மலேரியா, கேரளா என்றால் டெங்கு ஜீரம், இராஜஸ்தான் உத்திர பிரதேசம் என்றாலும் ஜப்பானில் என்றாலும் ஒரே ஒரு காரணம் வறுமை, வறுமைதான் மற்றவையெல்லாம் வெறும் விளக்கங்கள்தான்.

ஆனால், இந்தக் காரணத்தை ஒத்துக்கொள்வதன் மூலம் அந்தோனி குருடன் பயணிக்கத் தவறிவிடுகிறோம், நாம் இந்த சுழற்சியைத் தொடர அனுமதித்தும் விடுகிறோம். மலேரியா காரணமாக சாவுகள் மிகவும் நேர்வதற்கு அரசு அங்கு எதுவும் செய்யாததுதான் காரணமாகும். தீவிரவாத போராளி அமைப்புகள் மரணங்களுக்குக் காரணம் என்று சொல்லி தப்பித்துவிட முடியாது. நோய்கள் மிகவும் பரவலாக உள்ள இடங்களில் நம் நாட்டில் ஒருவிதமான தடுப்பு (அல்லது மறுப்பு) இருப்பது காரணம் எனலாம். இதில் பழங்குடி மக்களுடைய அறியாமை என்று அரசு அதிகாரிகள் சொல்லி இருட்டடிப்பு செய்வது என்பதை நாம் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் திட்டமிட்ட அமைப்பு முறையிலான வன்முறை என உணர வேண்டும். நோயும் அது காரணமாக மரணமும் ஏற்படுவது தற்போது மிகவும் வெளிப்படையாகத் தெரிந்தும் இவை அனைவரின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது. தருண் செக்ராவாட் (Tarun Sehrawat)ன் மரணம் தெஹெல்கா பத்திரிகையில் உள்ள எங்களுக்கு மறைக்கப்—பட்டவைகளை பார்ப்பதற்கு மற்றும் எவை, எவை இதுவரை செய்யப்படவில்லை என்பதையும் அறிய, உணர வைத்தது. கண்ணுக்குத் தெரியாத இந்த மரணங்கள் இப்போது அவர் மூலமாக பேச ஆரம்பித்திருக்கின்றன.

*revati@tehelka.com*
*anildantewada@rediffmail.com*

ஆதாரம்: **TEHELKA, 22 September 2012**

# புழல் சிறையில் விசாரணைக் கைதி தற்கொலை 10 மாதத்தில் 6வது தற்கொலை

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து சிறையில் கைதிகளின் சாவு எண்ணிக்கை 12 ஆகும். சென்னை: புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒரு விசாரணைக் கைதி செப்டம்பர் 21ம் தேதி வெள்ளிக் கிழமை இரவு தற்கொலை செய்து கொண்டார். கடந்த 10 மாதத்தில் 6 தற்கொலை நிகழ்ந்திருக்கிறது. இந்த தற்கொலைகள் மாநிலக் காவல்துறை, சிறைச் சாலைகளில் கைதிகளின் மறுவாழ்விற்காக விரிவான செயல்பாடு நடத்துவதாக சொல்லிக் கொண்டிருக்கும் நேரத்தில் நிகழ்கின்றன என்பது கவனிக்க வேண்டியது.

எஸ். சாதர்ரணா என்பவர் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்தவர். சிறைச்சாலை எண்.2ல் அவரது அறையின் கூரையில் துண்டை பயன்படுத்தி அவர் தூக்கிலிட்டுக் கொண்டார். கொலை செய்ததாக அவர் மேல் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மனச்சோர்வு காரணமாக அவர் தூக்கிலிட்டுக் கொண்டதாக சிறைத்துறை தரப்பில் கூறப்படுகிறது. இதற்கு முன் நிகழ்ந்த நான்கு தற்கொலைக்கும் காரணம் இதுதான் என்று சொல்லப்படுகிறது .இதற்கு முன்னர் தற்கொலை செய்து கொண்ட எம். சரவணன், எம். மணி, கே. சதீஷ் குமார் மற்றும் பிரகாஷ் ஆகிய நால்வரும் சிறை எண் 2ல் அடைக்கப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்ட கைதிகள் ஆவர்.

“எதிர்மறை உணர்வுகள்” உடன் வாழும் நிலை காரணமாக மனச் சோர்வு ஏற்பட்டு அது தற்கொலைக்குத் தூண்டுவதாக அமைந்துவிடுகின்றது. உபயோகமில்லாத ஒரு வாழ்வை அவர்கள் வாழ்வதாக நினைக்கின்றனர்” என்று ஃப்ரீடம் கேர் (Freedom care) என்னும் NGOவைச் சேர்ந்த KNS வரதன் சொல்கிறார்; போதைக்கு அடிமையானவர் மற்றும் சிறைக் கைதிகள் மத்தியில் பணிபுரிகின்றது இந்நிறுவனம். குடும்ப உறவினர்கள் இவர்களை தள்ளி வைத்து விடுவதும் மனச் சோர்வுக்கு ஒரு முக்கிய காரணம் என்றார் அவர். “விளையாட்டுப் போட்டிகள், கால் பந்தாட்டம் போன்றவை இவர்களுக்கு உதவும் என்கிறார் இவர். உளவியல் ரீதியான சமூக ஆதரவு மிக முக்கியம் என்கிறார், வரதன்.

சிறையில் மனநல மருத்துவர்கள் பணிக்கு நான்கு இடங்கள் மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்தாலும், மேலும் 9 பேரை சிபாரிசு செய்திருக்கிறார் J.K.திரிபாதி, சிறைக் கண்காணிப்பாளர் – (ADGP). இந்த முன்மொழிவு, தமிழ்நாடு பொதுதுறை தேர்வாணையத்தில் இன்னும் நிலுவையில் நிற்கின்றது. “மனவியல் ரீதியான ஆலோசனை கைதிகளுக்கு வழங்குவது என்பது இன்னும் நம் நாட்டில் வரவேற்கப்படவில்லை என்பதோடு நல்ல மனவியல் நிபுணர்கள் சிறைக்கு வர விரும்புவதில்லை” என்று பெயர் கூற விரும்பாத ஒரு மூத்த அதிகாரி (அரசு) கூறுகிறார்.

மனவியல் ஆறுதல் மற்றும் தற்கொலை தடுப்பு மையமான ஆறுதல் சாரிட்டிபுள் அறக்கட்டளை நடத்தும் டாக்டர் எஸ்.அபிலாஷா என்னும் மனவியல் சிகிச்சை நிபுணர். “தனக்கு நெருங்கிய நபரையோ அல்லது தம் குடும்பத்தில் ஒருவரையோ கொலை செய்யும்போது கொலை செய்தவர் குற்றவுணர்வில் புழுங்கத் துவங்குகிறார். மிரட்டல் அல்லது மொழி தெரியாத திணறல்கள் கூட காரணமாகலாம். இவர்களை ஆற்றுப்படுத்த வேண்டியது மிக அவசியம். இல்லையெனில் இவர்களுக்கு தற்கொலை எண்ணம் தூண்டப்படும் என்கிறார். சிறைப் பதிவேடுகள் பொய்யான செய்திகளை பதிவு செய்கின்றன. அதிகப்படியான இயற்கை அல்லாத மரணங்கள் நிகழ்வதாகக் குறிக்கின்றன. (கொலை மற்றும் தற்கொலைகள்) சிறைக் கைதிகள் குறித்த தேசிய குற்றப்பதிவு கையேடு கூறுவதன்படி 2011ம் வருடம் 12.

“சிறை வாழ்வு என்பது மிகக் கடுமையானது. அங்கு ஒவ்வொரு கைதிகளுக்கும் வேறு யாரைப் பற்றியும் கவலைப்பட நேரமில்லை. ஒவ்வொரு குற்றவாளியும் மிகக் கடுமையான மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களது இருத்தலை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டி இருக்கின்றது. அதில் காலந்தள்ளுவதே மிகக் கடுமையானதுதான் என்று தம் பெயரை கூற விரும்பாத சிறைப் பணியாளர் ஒருவர் கூறுவதோடு மேலும் அவர் கூறும்போது, “ஆனால், முதல் முறையாக குற்றம் செய்துவிட்டு சிறைக்கு வருபவர்கள் மற்றும் பொய்யான வழக்குப்பதிவுகளால் சிறைக்கு வருபவர்களின் பாடு திண்டாட்டமும் கொடுமையானது கூட” என்கிறார்.

**ஆதாரம்: 23.9.2012, Times of India**

## மரணங்களின் பட்டியல்

**சிறை அதிகாரிகள் பல சீர்திருத்த நடவடிக்கை மூலம் மறுவாழ்வுக்காக முயற்சி செய்த போதிலும் குற்றவாளிகள் மற்றும் விசாரணைக் கைதிகள் ஆகியோர்களின் மரணங்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. கடந்த நவம்பரிலிருந்து இதுவரை 12 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.**

| பெயர் | தேதி | மரணம் எவ்வாறு நிகழ்ந்தது |
|---|---|---|
| A. சுரேஷ் | நவம்பர் 2011 | தூக்கு |
| K. நித்தியராஜ் | 14, ஜனவரி, 2012 | உடல் நலமில்லாததால் |
| சின்ன கண்ணன் | 24 மே, 2012 | மாரடைப்பு |
| M. சரவணன் | 28 மே 2012 | தூக்கு |
| V. ரமேஷ் | 26 ஜுன் 2012 | புற்றுநோய் |
| M. மணி | 11 ஜுலை 2012 | தூக்கு |
| B. கண்ணன் | 19 ஜுலை 2012 | உடல் நலமில்லாததால் |
| K. சதீஷ்குமார் | 3 ஆகஸ்டு 2012 | தூக்கு |
| பிரகாஷ் | 11 ஆகஸ்டு 2012 | தூக்கு |
| குணசேரகன் | 8 செப்டம்பர் 2012 | வலிப்பு |
| முனியாண்டி | 19 செப்டம்பர் 2012 | மூச்சுத் திணறல் |
| S. சாதர்ரணா | 22 செப்டம்பர் 2012 | தூக்கு |

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) அரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.டில்லிபாபு பாதிக்கப்பட்ட மக்களிடம் உரையாடுகிறார்.





பட்டியலின மக்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன.

*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*
***Human Rights Advocacy and Research Foundation (HRF)***
*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 044 22353503, 044 22351919 Fax : 044 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*